بسم الله الرحمن الرحیم　نحمدہ ونصلی علی رسولہ الکریم　وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6 | இதழ் 50

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

11 ஜமாதில் அவ்வல் 1443 ஹிஜ்ரி கமரி 16 தப்லீக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 16 டிசம்பர் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

وَقَالُوا لَوْلَا أُنزِلَ عَلَيْهِ مَلَكٌ ۖ
وَلَوْ أَنزَلْنَا مَلَكًا لَّقُضِيَ الْأَمْرُ
ثُمَّ لَا يُنظَرُونَ ○

அவரிடத்து ஒரு வானவர் ஏன் இறக்கப்படவில்லை என்று அவர்கள் கேட்கின்றனர். நாம் ஒரு வானவரை இறக்கியிருந்தால், பிரச்சனைக்கு ஒரு முடிவு எட்டப்பட்டிருக்கும். பின்னர் அவர்களுக்கு எவ்விதக் கெடுவும் கொடுக்கப்பட்டிருக்காது. (6:9)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நான் மெய்யாகவே கூறுகின்றேன். அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் இரண்டாவது ஆதம் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் தாக்கம் அன்னார் (ரலி) மீது ஏற்பட்டது. மேலும் அன்னாரின் உள்ளம் நம்பிக்கையின் ஒளியால் நிறைந்திருந்தது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

முஸைலமா அக்காலத்தில் தவறான முறையில் மக்களை ஒன்றுகூட்டி வைத்திருந்தான். அதுபோன்ற நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனார்கள். எனவே எவ்வளவு அதிகமான கஷ்டங்கள் உருவாகி இருக்கும் என்பதை மனிதனால் எண்ணிப் பார்க்க முடியும். அந்த கடினமான தருணத்தில் வலிமையான உள்ளமும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஈமானிய நிலையும் அன்னாரது உள்ளத்தில் இல்லாமல் இருந்திருந்தால் மிக அதிகமான கஷ்டமும், பதற்றமும் ஏற்பட்டிருக்கும். ஆனால் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நெருங்கிய தோழராக இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் தாக்கம் அன்னார் (ரலி) மீது ஏற்பட்டிருந்தது. உள்ளம் நம்பிக்கையின் ஒளியால் நிறைந்திருந்தது. எனவே அன்னார் (ரலி) எப்படிப்பட்ட தீரத்தையும், உறுதிப்பாட்டையும் காட்டினார்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அதுபோன்ற நிகரான உதாரணம் கிடைப்பது கடினமாகும். அன்னாரின் மரணம் இஸ்லாத்திற்காகவே அமைந்து இருந்தது. இது எப்படிப்பட்ட ஒரு விவகாரம் என்றால் இதைக் குறித்து நீண்ட நெடிய விவாதத்திற்கு அவசியம் இல்லை. அந்த காலத்தின் நிலைமைகளை படியுங்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு ஆற்றிய தொண்டுகளை சீர்தூக்கிப் பாருங்கள்.

நான் மெய்யாகவே கூறுகின்றேன். அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் இரண்டாவது ஆதம் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் இருப்பு இல்லாமல் இருந்திருந்தால் இஸ்லாமே இருந்திருக்காது என்று நான் நம்புகின்றேன். அன்னார் இஸ்லாத்தை மீண்டும் நிலைநாட்டினார்கள். இது அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் மாபெரும் நன்மையாகும். தனது வலிமையான ஈமானால் அனைத்து

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

**மனித சட்டங்களில் எப்போதும் இந்த குறைபாடு இருக்கும். அதாவது அதில் சிலரது உரிமைகள் பறிக்கப்படுகின்றன. சிலருக்கு அதிகமாக வழங்கப்படுகின்றன. எல்லாருடைய உரிமைகளையும் கருத்தில் கொண்ட சட்டத்தையும், எவருடைய உரிமையிலும் எந்த குறைவும் செய்யாத மற்றும் ஒருவருடைய உரிமையை பறித்து மற்றவருக்கு வழங்காத சட்டத்தையும் இறைவனால் மட்டுமே உருவாக்க முடியும்**

وَعَلَى اللَّهِ قَصْدُ السَّبِيلِ وَمِنْهَا جَائِرٌ ۚ
وَلَوْ شَاءَ لَهَدَاكُمْ أَجْمَعِينَ (15:10)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

وَعَلَى اللَّهِ قَصْدُ السَّبِيلِ என்பதன் பொருள் நேரான வழியை கூறுவது இறைவனது பொறுப்பாகும் என்பதாகும். அதாவது حَقٌّ عَلَى اللهِ بَيَانُ قَصْدِ السَّبِيلِ என்ற இதே கட்டுரை வேறொரு இடத்தில் இந்த சொற்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

إِنَّ عَلَيْنَا لَلْهُدَىٰ நேர்வழியை எடுத்துரைப்பது எமது பணியே ஆகும். மேலும் எனது பொறுப்பாகும். நேரான வழி அல்லது கூடுதல், குறைவிலிருந்து பாதுகாப்பான வழியை எடுத்துரைப்பது அல்லாஹ்வால் மட்டுமே முடியும் என்று قَصْدُ السَّبِيلِ என்பதில் கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் மனிதன் எப்போதெல்லாம் உலகத்திற்காக ஒரு வழியை மேற்கொள்கின்றானோ அதில் கூடுதல், குறைவை மேற்கொண்டு விடுகின்றான். எல்லா மனிதனும் சார்புடையவன் ஆவான் என்று இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (இறைவனின் மேற்பார்வையில் உள்ள நபரைத் தவிர). ஒருவருடன் அவனுக்கு பகைமை இருக்கின்றது. வேறொருவருடன் அன்பு இருக்கின்றது. ஒருவரை தன்னவராக கருதுகின்றான். மற்றொருவரை மனிதன் அன்னியராக கருதுகின்றான். எனவே மனித சட்டங்களில் எப்போதும் இந்த குறைபாடு இருக்கின்றது. அதாவது அதில் சிலரது உரிமைகள் பறிக்கப்பட்டு விடும். மேலும் சிலருக்கு அதிகமாக வழங்கப்பட்டு விடும். எல்லாரது உரிமைகளையும் கருத்தில் கொண்ட சட்டத்தையும்,

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

## நபிமொழி

**கம்பின் மூலம் ஹிஜ்ருல் அஸ்வதைத் தொடுதல்**

1607: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் இறுதி ஹஜ்ஜில் ஒட்டகத்தின் மீதமர்ந்து வலம் வந்தார்கள். அப்போது ஒரு கம்பால் ஹிஜ்ருல் அஸ்வதைத் தொட்டார்கள்.

1632: ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒட்டகத்தின் மீதமர்ந்து பைத்துல்லாஹ்வை (கபாவை) வலம் வந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ருல் அஸ்வதிற்கு முன்னால் வரும்போதொல்லாம் தம் கையிலிருந்த ஒரு பொருளைக் கொண்டு ஹிஜ்ருல் அஸ்வதை நோக்கிச் சைகை செய்வார்கள். மேலும் அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறுவார்கள்.

(சஹீஹ் புகாரி, தொகுதி 3 பாடம் அல்ஹஜ் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்

*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 12 நவம்பர் 2021 (முழுவதுமாக)*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் 2013*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**ஜின் மற்றும் மனிதனின் ஷய்த்தான் உமரைக் கண்டு ஓடி விடுகின்றான் என்பதை நான் பார்க்கின்றேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவிலும், உள்ளத்திலும் அமைதி நிலைபெற்றிருக்கின்றது – ஹஸ்ரத் அலி (ரலி)**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை குறித்து இவர்கள் இருவரும் சொர்க்கவாசிகளில் முன்னவர்கள் மற்றும் பின்னவர்கள் அனைவரிலும் பெரிய வயதைக் கொண்ட அனைத்து மக்களுக்கும் தலைவர்கள் ஆவர். நபிமார்கள் மற்றும் தூதர்களைத் தவிர என்று ஹஸ்ரத் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

**ஒரு ஷஹீது உட்பட ஐந்து மர்ஹூம்களின் நற்குறிப்புகள் மற்றும் ஜனாஸா காயிப் தொழுகை**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 நவம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **12 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்று வந்தது. இன்றும் அது தொடரும். ஹஸ்ரத் ஹஃப்ஸா பின்த் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு உலகத்தின் மீதிருந்த பற்றற்ற தன்மை மற்றும் அன்னாரின் தூய்மையை குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: அன்னார் ஒரு முறை தனது தந்தையாரை அமீருல் மூமினீன் அவர்களே! என்று அழைத்து இவ்வாறு கூறியதாக ஓர் அறிவிப்பில் வருகின்றது.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. எனது தந்தையே! அல்லாஹ் உங்களுக்கு அதிக ரிஸ்கை வழங்கியுள்ளான். மேலும் வெற்றிகளை வழங்கியுள்ளான். மேலும் அதிகமான செல்வத்தையும் வழங்கியுள்ளான். அவ்வாறிருக்க தாங்கள் ஏன் தங்களது உணவில் மென்மையான உணவை சேர்த்துக் கொள்ளக் கூடாது? அல்லது தாங்கள் ஏன் இதை விடவும் அதிக மென்மையான உடையை உடுத்தக் கூடாது? என்று கூறினாார்கள்.

அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நான் உம்மிடமே இந்த விவகாரத்திற்கு தீர்ப்பை விரும்புகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வாழ்க்கையில் எத்தனை கடினங்களை சந்திக்க நேரிட்டது என்பது உங்களுக்கு நினைவில் இல்லையா? என்று கேட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அன்னார் (ரலி) அவர்கள் தொடர்ந்து ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கு எந்த அளவிற்கு (அதனை) நினைவூட்டி வந்தார்கள் என்றால் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை அழச் செய்து விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு எந்த அளவுக்கு ஆற்றல் இருக்குமோ நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் (தமது) வாழ்க்கையில் சந்தித்த கடினங்களில் பங்கு பெற்று வருவேன். ஏனென்றால் அதன் மூலம் அந்த இருவரின் மகிழ்ச்சியான வாழ்க்கையிலும் என்னால் இணைந்து விட முடியும்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: உமரின் மகள் ஹஃப்ஸாவே! நீங்கள் உமது சமுதாயத்திற்கு நன்மையை விரும்பியுள்ளீர்கள். ஆனால் உங்களது தந்தைக்கு நன்மையை விரும்பவில்லை. இது நடந்தால் நான் சமுதாயத்திற்கு சிறந்த தொண்டாற்றுவேன் என்று நீங்கள் எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளீர்கள். ஆனால் எனக்கு நீங்கள் நன்மையை விரும்பவில்லை.

தொடர்ந்து அன்னார் கூறினார்கள்: எனது குடும்பத்தினருக்கு எனது செல்வத்தின் மீதும், எனது உயிரின் மீதும் உரிமை உள்ளது. ஆனால் எனது மார்க்கத்திலும், எனது அமானிதங்களிலும் அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

(அத்தபக்கத்துல் குப்ரா லி இப்னி சஆத் தொகுதி 3 பக்கம் 5148 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது நான் எந்த அமானிதங்களை நிறைவேற்றி வருகின்றேனோ அது தொடர்பாக உம்மிடம் எதையும் கூறுவதற்கு எனக்கு அவசியம் இல்லை. இந்த விஷயத்தில் அல்லது இது தொடர்பாக கூறுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை.

ஹஸ்ரத் இக்ரிமா பின் காலித் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) மேலும் அவர்களைத் தவிர்த்து வேறு சில நபர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் பேசியவாறு இவ்வாறு கூறினார்கள்: தாங்கள் இன்னும் சிறந்த உணவை உண்டால் உண்மைக்காக பணி செய்வதில் தாங்கள் இன்னும் வலிமை வாய்ந்தவராக ஆகி விடுவீர்கள்.


ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உங்கள் அனைவரின் கருத்தும் இதுதானா? என்று கேட்டார்கள். அதற்கு, ஆம்! என்று அவர்கள் கூறினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் உங்களை (எனக்கு) நன்மையை விரும்புபவர்களாக புரிந்து கொண்டேன். ஆனால் நான் எனது இரண்டு நண்பர்களை அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோரை அந்த வழியிலேயே பிரிந்துள்ளேன். தற்போது நான் அந்த இருவரின் அந்த வழியிலிருந்து விலகி விட்டால் பின்னர் அவர்கள் இருவரையும் குறிப்பிட்ட இடத்தில் என்னால் சந்திக்க முடியாது.

(ஜலாலுத்தீன் சுயூத்தி அவர்கள் எழுதிய தாரீகுல் குலஃபா என்ற நூல் பக்கம் 101 உமர் பின் கத்தாப் – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் அபாயகரமான காலமாக இருந்தது. அந்த நேரத்தில் அன்னார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு வழங்கிய கட்டளைகளிலிருந்து நம்மால் படிப்பினை பெற முடியும். அன்னாரின் வழிமுறையும், வழிகாட்டலும் இவ்வாறே இருந்தது. அதாவது ஒரு குழம்பை விட அதிகமான குழம்பை உணவில் பயன்படுத்தக் கூடாது.


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது ஒரு குத்பாவில் தஹ்ரீகே ஜதீத் குறித்து இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட குழம்பை பயன்படுத்த வேண்டாம் என்று வழிகாட்டல் வழங்கி இருந்தார்கள். இதில் மிக அதிகமாக அழுத்தம் கொடுத்து வந்தார்கள். சில சஹாபிகள் அதில் வரம்பு மீறி விட்டார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் வினிகர் மற்றும் உப்பு வைக்கப்பட்டது. இந்த இரண்டு உணவுப் பொட்களும் ஏன் வைக்கப்பட்டுள்ளன? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு உணவுப் பொருளை மட்டுமே பயன்படுத்துவதற்கு கட்டளை வழங்கியுள்ளார்கள் என்று கூறினார்கள். மக்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இவை இரண்டல்ல. மாறாக, வினிகர் மற்றும் உப்பு இரண்டும் இணைந்து தான் ஒரு குழம்பு உருவாகின்றது என்றார்கள். ஆனால் இல்லை இது இரண்டு தான் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த செயல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தின் உணர்வின் காரணமாக வரம்பு மீறுதல் என்ற அம்சத்தை கொண்டிருப்பதாக தோன்றலாம். அநேகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோக்கமும் இதுவாக இருக்கவில்லை. ஆயினும் இந்த உதாரணத்திலிருந்து இந்த விஷயம் நிச்சயம் தெரிய வருகின்றது. அதாவது முஸ்லிம்களுக்கு எளிமை அவசியம் என்பதை கண்டபோது அன்னார் அதற்கு இந்த அளவிற்கு வலியுறுத்தினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கோரிக்கையை போன்ற வேண்டுதலை நான் செய்யவில்லை. உப்பு ஒரு குழம்பாகும். வினிகர் ஒரு குழம்பாகும் என்று நான் கூறவில்லை. ஆனால் இன்றிலிருந்து மூன்று வருடம் வரை (இவ்வாறு செய்ய வேண்டும்). இந்த மூன்று வருடத்தில் ஒவ்வொரு ஆண்டிற்குப் பிறகும் நான் மீண்டும் அறிவிப்பு செய்து வருவேன். இந்த மூன்று ஆண்டுகளில் அச்சத்திற்கான நிலைமை மாறி விட்டால் கட்டளைகளையும் மாற்றிக் கொள்ள முடியும். நம்முடன் இந்தப் போரில் பங்கு பெற விரும்பும் ஒவ்வொரு அஹ்மதியும் இவ்வாறு உறுதிமொழி எடுக்க வேண்டும். அதாவது இன்றிலிருந்து அவர் ஒரே ஒரு குழம்பை மட்டும் தான் (உணவில்) பயன்படுத்துவார். ரொட்டியும், குழம்பும் அல்லது சோறும், குழம்பும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவை இரண்டு பொருட்கள் அல்ல. மாறாக இரண்டும் இணைந்து ஒன்றாக இருக்கும். ஆனால் ரொட்டியுடன் இரண்டு குழம்பும் அல்லது சோறுடன் இரண்டு குழம்புகளையும் பயன்படுத்துவதற்கு அனுமதி இல்லை.

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 15 பக்கம் 426)

இது தஹ்ரீகே ஜதீத் அறிவிப்பு செய்த காலத்தில் நிகழ்ந்த விஷயமாகும். அந்த நேரத்தில் ஜமாஅத்திற்கு (அதன்) தேவை இருந்தது. எனவே உங்களது செலவுகளை சுருக்கிக் கொண்டு சந்தா கொடுங்கள் என்று ஜமாஅத் மக்களுக்கு அறிவுறுத்தினார்கள். அல்லாஹ்வின் அருளால் தற்போது நிலைமை வேறுபட்டதாக உள்ளது. எனவே தற்போது இந்த கட்டுப்பாடு இல்லை. ஆயினும் வரம்பு மீறி செயல்படக் கூடாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் وَالَّذِيْنَ إِذَا اَنْفَقُوْا لَمْ يُسْرِفُوْا وَلَمْ يَقْتُرُوْا وَكَانَ بَيْنَ ذٰلِكَ قَوَامًا என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்: ஒருவர் ரஹ்மானின் அடியாராக ஆக விரும்புகின்றார் என்றால் அவர் தனது செல்வத்தை செலவிடும் நேரத்தில் இரண்டு விஷயங்களை கருத்தில் கொள்வது அவருக்கான நிபந்தனையாகும். ஒன்று, அவர் தனது செல்வத்தில் வீண் விரயம் செய்யக் கூடாது. அவரது உணவு வெறும் பகட்டாகவும், சுவைக்காகவும் இருக்கக் கூடாது. மாறாக, ஆற்றல், வலிமை மற்றும் உடல் ஆரோக்கியத்தை நிலைநாட்டுவதற்காக இருக்க வேண்டும். அவரது ஆடை ஆடம்பரத்திற்காக இருக்கக் கூடாது. மாறாக, உடலை மறைப்பதற்காகவும், அல்லாஹ் அவருக்கு வழங்கிய அந்தஸ்தை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இருக்க வேண்டும். எனவே சஹாபிகளின் செயல் வழிமுறை நமக்கு இதனை உணர்த்துகின்றது. அதாவது அவர்களும் இவ்வாறே செய்து வந்தனர்.

எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறை சிரியா நாட்டிற்கு சென்றார்கள். அங்கு சில சஹாபிகள் பட்டாடை அணிந்திருந்தார்கள். இங்கு பட்டாடை என்பதன் பொருள் அதில் ஓரளவிற்கு பட்டு இருந்தது என்பதாகும். முற்றிலும் பட்டாடையாக அது இருக்கவில்லை. பட்டாடை என்பது நோய்வாய்ப்பட்ட ஆண்களைத் தவிர்த்து மற்ற ஆண்கள் அணிவது தடுக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது தோழர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இந்த மக்கள் மீது மண்ணை வீசுங்கள். அதாவது இதனை தீயதாக கருதுங்கள். நீங்கள் தற்போது எந்த அளவிற்கு ஆடம்பர விரும்பிகளாக ஆகி விட்டீர்கள் என்றால் நீங்கள் பட்டாடைகளை உடுத்துகின்றீர்கள் என்று கூறினார்கள்.

அப்போது அந்த சஹாபிகளில் ஒருவர் சட்டையை எடுத்து காட்டியபோது அவர் கீழே தடித்த மற்றும் கடினமான கம்பளி ஆடையை அணிந்திருந்தார் என்பது தெரிய வந்தது. நாங்கள் இதனை விரும்பி இந்த பட்டாடையை உடுத்தவில்லை. மாறாக, இந்த நாட்டின் மக்களின் நடைமுறையே இவ்வாறு தான் உள்ளது. மேலும் இவர்கள் குழந்தைப் பருவம் முதலே ஆட்சியாளர்களை இப்படி பார்ப்பதற்கு பழக்கப்பட்டு விட்டார்கள். ஆட்சியாளர்கள் மிகவும் பொலிவுடனும், மகிமையுடனும் வாழ்ந்து வந்தார்கள். எனவே நாங்களும் அவர்களின் நிலைமைகளை கருத்தில் கொண்டு எங்களது ஆடைகளை நாட்டின் அரசியல் சூழலுக்கேற்ப மாற்றிக் கொண்டோம். இல்லையென்றால் அவர்கள் மீது எங்களுக்கு எந்த தாக்கமும் இருக்காது என்று அவர் கூறினார். ஆக வீண் விரயம் என்பதன் பொருள் என்ன? என்பதை சஹாபிகளின் செயல் கூறுகின்றது. இதன் பொருள் என்னவென்றால் தேவையில்லாத விஷயங்களில் செல்வத்தை செலவிடக் கூடாது. மேலும் எந்த விவகாரததின் நோக்கம் ஆடம்பரமாகவும், பகட்டாகவும் இருக்குமோ அதில் செலவிடக் கூடாது.

சுருக்கமாக இறைவன் கூறுகின்றான்: தமது செல்வங்களை வீண் விரயம் செய்யாதவர்களே ரஹ்மானின் அடியார்கள் ஆவர். அதாவது அவர்கள் செல்வங்களை வீண் விரயமும் செய்ய மாட்டார்கள். மேலும் தங்களது செல்வங்களை பிறருக்கு காட்டுவதற்காகவும் செலவு செய்ய மாட்டார்கள். மாறாக, நன்மை மற்றும் பயனிற்காக மட்டும் செலவிடுவார்கள். செல்வத்தை எங்கு செலவழிப்பது அவசியமோ அதிலிருந்து விலகிக் கொள்ள மாட்டார்கள். அதாவது அவர்கள் நடுநிலையை பேணுவார்கள். மேலும் அந்த செலவீனம் நன்மையின் காரணியாக அமைந்திருக்கும். மேலும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு மாற்றமாக தமது செல்வத்தை செலவிடக் கூடாது. ஆகுமான உரிமைகளையும் வழங்குவதிலிருந்தும் தடுக்கக் கூடாது. செல்வத்தை செலவழிப்பது தொடர்பாக ரஹ்மானின் அடியார்களுக்கு இந்த இரண்டு நிபந்தனைகள் உள்ளன. ஆனால் ஏராளமான மக்கள் உள்ளனர். அவர்கள் ஒன்று, வரம்பு மீறுதலின் பக்கம் சென்று விடுகின்றனர் அல்லது கருமித்தனத்தின் பக்கம் சென்று விடுகின்றனர்.

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 5 பக்கம் 3,4)

பெருமை மற்றும் ஆடம்பரமான ஆடைகளுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த அளவிற்கு எதிரானவர்களாக இருந்தார்கள் என்றால் தோல்வியுற்ற எதிரி கூட அதுபோன்ற ஆடைகளை அணிந்து கொண்டு தன் முன் வரக் கூடாது என்று விரும்பினார்கள். எனவே பாரசீகர்களின் படைத்தளபதி ஹுர்முஸான் சம்பவத்தில் இதன் விளக்கம் கிடைக்கின்றது. நான் முன்னரே இதன் விளக்கத்தை எடுத்துரைத்து விட்டேன். இங்கு சிறு பகுதியை தெளிவுபடுத்துவதற்காக எடுத்துரைக்கின்றேன்.

துஸ்தர் வெற்றியின் நேரத்தில் பாரசீகர்களின் படைத்தளபதி ஹுர்முஸான் ஆயுதத்தை கீழே போட்டு விட்டு முஸ்லிம்களிடம் சுயமே சரணடைந்து விட்டான். மேலும் அவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சமூகத்தில் மதீனாவிற்கு அனுப்பப்பட்டு விட்டான். அப்போது மதீனாவில் நுழைவதற்கு முன்பு அன்னாரை அழைத்துச் செல்லக் கூடிய முஸ்லிம்கள் அவருக்கு அவரது பட்டாடையை அணிவித்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் முஸ்லிம்களின் அசல் கம்பீரத்தை அவன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் அவர் வந்தபோது இது ஹுர்முஸானா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஆம்! என்று மக்கள் கூறினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனையும், அவனது ஆடையையும் உற்று பார்த்தார்கள். நான் நெருப்பிலிருந்து அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருகின்றேன். மேலும் அல்லாஹ்விடம் உதவி தேடுகின்றேன் என்று கூறினார்கள். இவர் ஹுர்முஸான் ஆவார் என்று குழுவைச் சேர்ந்த மக்கள் கூறினர். இவரிடம் பேசுங்கள் என்றும் கூறினர். அதற்கு ஒருபோதும் முடியாது. இவர் தமது மேன்மையான ஆடையையும், நகைகளையும் கழற்றி விடாத வரை ஒருபோதும் முடியாது என்று அன்னார் கூறினார்கள். எனவே அவை அனைத்தும் கழற்றப்பட்டன. அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருடன் பேசினார்கள்.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 424, 425 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தாழ்மை குணம் மற்றும் இறையச்சத்தின் தரத்தை குறித்தும் இதிலிருந்து நம்மால் தெரிந்து கொள்ள முடியும். உர்வா பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை தோளில் தண்ணீர் குடம் ஒன்றை சுமந்தவாறு கண்டேன். அப்போது அமீருல் மூமினீன் அவர்களே! தங்களுக்கு இது உகந்ததல்ல என்று கூறினேன். அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பல்வேறு சமுதாயங்களின் குழுக்கள் என்னிடத்தில் கட்டுப்படுதலை வெளிப்படுத்தியவாறு வரும்போது எனக்கு எனது உள்ளத்தில் (தற்)பெருமைக்கான உணர்வு உண்டானது. எனவே நான் அந்த (தற்)பெருமையின் எண்ணத்தை உடைப்பதை அவசியமாக கருதினேன்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 122 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

எனவே இந்த தற்பெருமையின் எண்ணம் ஏன் உருவானது? என்பதை எண்ணி நான் இந்த தண்ணீரின் குடத்தை சுமந்து கொண்டு சென்று அதனை உடைக்க விரும்பினேன்.

ஹஸ்ரத் யஹ்யா பின் அப்துர் ரஹ்மான் பின் காதிப் (ரலி) அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடன் மக்காவிலிருந்து குழுவாக திரும்பிக் கொண்டிருந்தோம். எந்த அளவுக்கென்றால் நாங்கள் ஸஜ்னான் எனும் பள்ளத்தாக்கை வந்தடைந்தோம். மக்கள் அங்கு நின்று விட்டனர். ஸஜ்னான் என்பது மக்காவிலிருந்து 25 மைல் தொலைவிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அந்த இடத்தில் எனக்கு அந்த நேரம் நினைவிற்கு வந்தது. அதாவது அப்போது நான் எனது தந்தையின் ஒட்டகத்தின் மீது இருந்தேன். எனது தந்தையோ மிகக் கடினமான இயல்பு கொண்ட மனிதராக இருந்தார். ஒரு முறை அந்த ஒட்டகங்களில் மரக்கட்டைகளை நான் எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தேன். இரண்டாவது முறை அதில் நான் புற்களைக் கொண்டு சென்றேன். இன்று எனது நிலை என்னவென்றால், மக்கள் எனது பகுதிகளில் தொலைதூரத்தில் பயணம் செய்கின்றனர். என் மீது எந்த சுமையும் இல்லை. அதாவது நானோ ஒரு பரந்துபட்ட பகுதிக்கு ஆட்சியாளனாக இருக்கின்றேன். எனது ஆட்சியில் மக்கள் நெடுந் தூரம் வரை பயணம் செய்கின்றனர். மேலும் என்னை சந்திக்க வருகின்றனர். மேலும் என் மீது ஆளுமை செய்யக்கூடிய எந்த ஆட்சியாளரும் இல்லை. பின்னர் இந்த கவிதையை படித்தார்கள்.

لَاشَیْءَ فِیمَا تَرٰی اِلَّا بَشَاشَتَهُ
یَبْقَی الْاِلٰهُ وَیُوْدِی الْمَالُ وَالْوَلَد

பொருள்: என்னவெல்லாம் உமக்கு தென்படுகிறதோ அவை ஒரு தற்காலிக இன்பமே தவிர மற்றபடி அதில் எந்த உண்மையும் இல்லை. இறைவனின் இருப்பு மட்டுமே எஞ்சியிருக்கும். செல்வமும், பிள்ளைகளும் அழிந்து விடும்.

(அத்தப்கத்துல் குப்ரா லி இப்னி சஆத் தொகுதி 3 பக்கம் 202 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஃபத்ஹுல் பாரி தொகுதி 2 பக்கம் 144 – கராச்சி, ஆராம்பாகிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஜ் செய்து விட்டு வந்து கொண்டிருந்தபோது ஒரு மரத்திற்கு அருகே நின்று விட்டார்கள். அப்போது தயக்கம் கொள்ளாத ஹுஸைஃபா அவர்கள் தைரியமாக அதற்கான காரணத்தை கேட்டார்கள். அப்போது அன்னார் கூறினார்கள்: ஒரு காலத்தில் நான் எனது ஓர் ஒட்டகத்தை மேய்த்து வந்தேன். அப்போது இந்த மரத்தின் கீழ் எனது தந்தை என்னை மிகவும் கண்டித்தார்கள். தற்போது காலம் எப்படி உள்ளது என்றால் ஒட்டகம் என்ன! பல லட்சம் மனிதர்கள் எனது ஒரு கண் சைகையில் உயிரைக் கொடுப்பதற்கு தயாராக உள்ளார்கள்.

(ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 3 பக்கம் 326)

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒட்டகங்களை மேய்க்கின்ற ஒரு நபர் மாபெரும் அரசராகி விட்டார். அவர் வெறும் உலக அரசராக மட்டும் ஆகவில்லை. மாறாக, ஆன்மீக அரசராகவும் ஆகி விட்டார். இது வியப்பிற்குரிய விஷயமில்லையா? ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒட்டகங்களை மேய்த்து வந்தார்கள். ஒரு முறை ஹஜ்ஜிற்கு சென்றிருந்தபோது வழியில் ஓரிடத்தில் நின்று விட்டார்கள். வெயில் மிக கடுமையாக இருந்தது. அதனால் மக்களுக்கு மிக அதிக துன்பம் ஏற்பட்டது. ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் ஏன் இங்கே நிற்கின்றார்கள்? என்று கேட்பதற்கு எவருக்கும் தைரியம் வரவில்லை. இறுதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பராக ஒரு சஹாபி இருந்தார். அவர் குழப்பம் தொடர்பாக கேள்வி கேட்டு வந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இங்கே ஏன் நிற்கின்றீர்கள் என்று கேட்கும்படி மக்கள் அன்னாரிடம் கூறினர். எனவே முன்னால் செல்லுங்கள். இங்கு ஏன் நிற்கின்றீர்கள்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அவர் கூறினார்.

அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் ஏன் இங்கே நிற்கின்றேன் என்றால் ஒரு முறை ஒட்டகத்தை மேய்த்ததன் காரணத்தால் களைப்படைந்து இந்த மரத்தின் கீழே நான் உறங்கி விட்டேன். எனது தந்தை வந்தார். நான் உன்னை இங்கு உறங்குவதற்காகவா அனுப்பி இருந்தேன் என்று கூறி என்னை அடித்து விட்டார். ஒரு நேரத்தில் எனது நிலை இப்படி இருந்தது. ஆனால் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒப்புக் கொண்டேன். எனவே இன்று இறைவன் எப்படிப்பட்ட அந்தஸ்தை எனக்கு வழங்கியுள்ளான் என்றால் நான் இன்று இலட்சக்கணக்கான மனிதர்களிடம் கூறினால் அவர்கள் என்னுடைய இடத்தில் உயிரைக் கொடுப்பதற்கு ஆயத்தமாக உள்ளனர்.

இந்த சம்பவத்திலிருந்தும் இன்னும் இதுபோன்ற ஏராளமான சம்பவங்களிலிருந்தும் சஹாபா பெருமக்கள் எந்த நிலையில் இருந்தார்கள்? மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதால் அவர்களின் நிலைமை எப்படி ஆகி விட்டது? என்பது தெரிய வருகின்றது. மேலும் யாருக்கும் கிடைத்திராத அந்தஸ்தையும், அறிவையும் அவர்கள் பெற்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த சம்பவத்தை ஏன் எடுத்துரைத்துள்ளேன் என்றால், பாருங்கள்! ஒட்டகத்தை மேய்க்கக்கூடிய ஒருவருக்கு மார்க்கம் மற்றும் உலகத்தின் எப்படிப்பட்ட அறிவு கற்றுக் கொடுக்கப்பட்டதென்றால் அது எவருக்கும் புரிய முடியாமல் இருந்தது. ஒரு பக்கம் ஒட்டகம் அல்லது ஆடுகளை மேய்க்கக்கூடிய நிலைமையை பாருங்கள். அறிவிலிருந்து தொலைவாக இருக்கின்ற நிலை தென்படுகின்றது. மற்றொரு பக்கம் இந்த விஷயத்தை சீர்தூக்கிப் பாருங்கள். இன்று ஐரோப்பிய மக்கள் நாட்டை நிர்வகிக்கும் சட்டங்களை மிகவும் நன்கு அறிந்தவர்களாக இருப்பவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களை கண்ணியத்துடன் பார்க்கின்றனர்.

ஒட்டகம் மேய்க்கக் கூடிய ஒருவருக்கும் ஆட்சி அதிகாரத்திற்கும் என்ன தொடர்பு இருக்கின்றது? ஆனால் பாருங்கள்! அன்னார் எப்படிப்பட்ட பணிகளையெல்லாம் செய்தார்கள் என்றால் இன்று உலகம் அன்னாருக்கு முன்னால் தலை வணங்குகின்றது. அன்னாரின் அரசியல் அறிவை பாராட்டுகின்றது.

அடுத்து பாருங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு சாதாரண வியாபாரியாக இருந்தார்கள். ஆனால் இன்று உலகம் வியப்பில் உள்ளது. அன்னாருக்கு இந்த புரிதலும், அறிவும், இந்த சிந்தனையும் எங்கிருந்து கிடைத்தது? என்று ஆச்சரியம் அடைகின்றது. ஆனால் நான் கூறுகின்றேன். திருக்குர்ஆனிலிருந்தே அன்னாருக்கு இவை அனைத்தும் கிடைத்தன. அன்னார் திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்த்தார்கள். எனவே முழு உலகமும் அறியாத விஷயம் அன்னாருக்கு கிடைத்து விட்டது. ஏனென்றால் திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஓர் ஆயுதம் என்றால் அதனுடன் உள்ளத்தை இணைத்துக் கொண்டால் பின்னர் உள்ளம் இவ்வாறு தூய்மையடைந்து விடும். அதாவது முழு உலகத்தின் ஞானங்களும் அதில் தென்பட்டு விடும். பின்னர் மனிதன் மீது எப்படிப்பட்ட ஒரு வாசல் திறந்து விடுமென்றால் அதன் பிறகு அவரது உள்ளத்தில் இறங்கும் ஞானத்தை யார் தடுத்தாலும் தடுக்க முடியாது. எனவே ஒவ்வொரு மனிதனும் திருக்குர்ஆனை ஓதுவதும், அதை சீர்தூக்கிப் பார்ப்பதும் அவசியமாகும்.

(அன்வாரே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 130, 131)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பணிவு மற்றும் தாழ்மை குணம் தொடர்பாக மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. ஜுபைர் பின் நுஃபர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம் ஒரு கூட்டம் இவ்வாறு உரையாடியது. அமீருல் மூமினீன் அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் உங்களை விட அதிகம் நீதம் செய்யக் கூடியவராகவும், அதிகம் உண்மை பேசக் கூடியவராகவும், நயவஞ்சகர்கள் மீது கடினம் காட்டக் கூடியவராகவும் எவரையும் நாங்கள் காணவில்லை. நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு மக்களில் தாங்களே மிகச் சிறந்தவர் ஆவீர்கள். அப்போது அவ்ஃப் பின் மாலிக் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் பொய் கூறியுள்ளீர்கள்.

நிச்சயமாக நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னாரை விட அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விட சிறந்தவரை கண்டுள்ளோம் என்று அந்த நபரிடம் கூறினார்கள். அப்போது அவ்ஃபே! அது யார்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், அபூபக்ர் (ரலி) என்று கூறினார். அப்போது அவ்ஃப்! உண்மையை கூறியுள்ளார் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். நீர் பொய் பேசியுள்ளீர். இறைவன் மீது ஆணையாக! அபூபக்ர் (ரலி) அவர்கள் கஸ்தூரியின் நறுமணத்தை விடவும் தூயவர் ஆவார்கள். மேலும் நானோ எனது குடும்பத்தினரின் ஒட்டகத்தை விடவும் விலகி நிற்கின்றேன் என்று அந்த நபரிடம் கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 7 கிதாபுல் ஃபஸாயிலுஸ் சஹாபா எண் 35624 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹதீஸ்களில் வருகின்றது. ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருக்கிடையே ஏதோவொரு விஷயத்தில் சச்சரவு ஏற்பட்டு விட்டது. இந்த சச்சரவு அதிகரித்து விட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் வேகம் இருந்தது. எனவே அந்த இடத்திலிருந்து சென்று விட வேண்டும். ஏனென்றால் தேவையில்லாமல் சண்டை சச்சரவு வளர்ந்து விடக் கூடாது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கருதினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் செல்வதற்கு முயற்சி செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முன்னால் சென்று எனது விஷயத்திற்கு பதில் கூறிவிட்டு செல்லுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சட்டையை பிடித்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை (ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை) விலக்குவதற்கு முற்பட்டபோது அன்னாரின் சட்டை கிழிந்து விட்டது. அன்னார் அங்கிருந்து தனது வீட்டிற்கு சென்று விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் என்னைப் பற்றி புகார் செய்ய சென்றுள்ளார்கள் என்ற ஐயம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஏற்பட்டது.

நானும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் எனது தரப்பு காரணத்தை எடுத்துரைப்பேன் என்ற எண்ணத்தில் அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை பின்தொடர்ந்து சென்றார்கள். ஆனால் வழிப்பாதையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பார்வையிலிருந்து மறைந்து விட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் புகார் தெரிவிக்கவே சென்றுள்ளார்கள் என்று எண்ணி அன்னார் நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தை சென்றடைந்தார்கள். அங்கு சென்று பார்த்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு இல்லை. ஆனால் அன்னாரின் உள்ளத்தில் வெட்கம் உருவாகி இருந்தது. எனவே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் தவறு ஏற்பட்டு விட்டது. நான் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கடினமாக நடந்து கொண்டேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது எந்த குற்றமும் இல்லை. நானே தவறு செய்தேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகியபோது யாரோ ஒருவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தங்களைக் குறித்து புகார் செய்வதற்கு சென்றுள்ளார் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார். நானும் என் தரப்பு விளக்கத்தை கொடுப்பதற்கு செல்ல வேண்டும். ஒரு தரப்பு விஷயமாக இருக்கக் கூடாது. நானும் எனது தரப்பு கருத்தை எடுத்து வைப்பேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) எண்ணினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்தடைந்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் தவறு ஏற்பட்டு விட்டது. நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சண்டையிட்டு என்னால் அன்னாரின் சட்டை கிழிந்து விட்டது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை கேட்டபோது கோபத்தின் தாக்கங்கள் அன்னாரின் முகத்தில் வெளிப்பட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! உங்களுக்கு என்னவாகி விட்டது? முழு உலகமும் என்னை நிராகரித்துக் கொண்டிருந்தது. நீங்களும் எனக்கு எதிரிகளாக இருந்தீர்கள். அந்த நேரத்தில் அபூபக்ர் தான் என் மீது ஈமான் கொண்டார். எல்லா வகையிலும் எனக்கு உதவி செய்தார்.

பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் வேதனையுடன் கூறினார்கள்: இப்போதும் கூட நீங்கள் என்னையும், அபூபக்ரையும் விட்டு விடுவதில்லையா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைக் கூறிக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சபையில் நுழைந்து விட்டார்கள். அல்லாஹ்வின் தூதரே! எனது குற்றமல்ல. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குற்றமாக இருந்தது என்று சாக்கு போக்கு கூறுவதற்கு பகரமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உள்ளே நுழைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் துன்பம் உருவாகின்றது என்பதை கண்டார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராக இருந்தார்கள். எனவே தன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வேதனை ஏற்படுவதை அன்னாரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்த உடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் முழங்காலிட்டு அமர்ந்து விட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உமர் மீது தவறில்லை. எனது தவறு தான் என்று கூறினார்கள். இதுவே உண்மையான உண்மைப் பேரன்பரின் முன்னுதாரணமாகும்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 27 பக்கம் 313, 314)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் பெண்களுக்கு கருக்கலைப்பு ஏற்பட்டு விடும் நிலையில் நடவடிக்கை தொடர்பாக ஆலோசனை செய்தார்கள். மகீரா அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் அடிமை அல்லது ஓர் அடிமைப் பெண்ணின் விலையில் நிவாரணத் தொகையை வழங்கும்படி தீர்ப்பு வழங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், உங்களது இந்த கூற்றிற்கு சாட்சி கூறும் ஒரு நபரை கொண்டு வாருங்கள் என்று அவரிடம் கூறினார்கள். பின்னர் முஹம்மது பின் மஸ்லமா அவர்கள் சாட்சி கூறினார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். பின்னர் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறே தீர்ப்பு வழங்கி இருந்தார்கள் என்று சாட்சி கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தியாத்... எண் 6905, 6906)

அதாவது ஒரு அநீதியின் காரணமாக அல்லது பலவந்தமாக ஒரு பெண்ணின் கரு கலைந்திருந்தால் அல்லது கலைக்கப்பட்டால் பின்னர் அதற்கு நிவாரணம் வழங்குவது அவசியமாகும். எவர் அந்த அநீதியை செய்தாரோ அவர் அந்த நிவாரணத் தொகையை வழங்குவார். ஓர் அடிமைப் பெண் அல்லது ஓர் அடிமையை அவர் விடுதலை செய்வார்.

ஹஸ்ரத் அபூ சயீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஆஜராகுவதற்கு அனுமதி வேண்டினார்கள். எனவே அன்னார் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். மேலும் நான் உள்ளே வரலாமா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், தற்போது அவர் ஒரு முறையே அனுமதி கேட்டுள்ளார் என்று தனது உள்ளத்தில் எண்ணிக் கொண்டு மௌனமாக இருந்தார்கள். பின்னர் அந்த நபர் மீண்டும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி நான் உள்ளே வரலாமா? என்று கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உள்ளத்தில் கூறினார்கள். அதாவது அதற்கு பதில் உள்ளத்தில் கூறினார்கள். மேலும் தற்போது அவர் இரண்டு முறை மட்டுமே அனுமதி கேட்டுள்ளார் என்று எண்ணி சிறிது நேரம் மேலும் மௌனமாக இருந்தார்கள். அப்போது அந்த நபர் மீண்டும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி நான் உள்ளே வரலாமா? என்று கேட்டார்.

அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் மூன்று முறை அனுமதி கேட்டிருந்தார்கள். எனவே திருப்பிச் சென்று விட்டார்கள். அன்னார் மூன்று முறை அனுமதி வேண்டினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பதிலை கேட்காதபோது திருப்பிச் சென்று விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அபூ மூஸா என்ன செய்கின்றார்? என்று ஊழியரிடம் கேட்டார்கள். அப்போது அவர் திரும்பிச் சென்று விட்டார்கள் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். அன்னாரிடம் அவர் வந்தபோது தாங்கள் என்ன செய்து விட்டீர்கள்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் சுன்னத்தின்படி அமல் செய்தேன்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

என்று அவர் கூறினார். சுன்னத்தின்படி அமல் செய்தீர்களா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது சுன்னத்தாகும் என்பதற்கு நீங்கள் ஆதாரத்தையும், சான்றையும் வைக்க நேரிடும். இல்லையென்றால் நான் உங்களுடன் கடுமையாக நடந்து கொள்வேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அபூ சயீத் குத்ரி (ரலி) அவர்கள் கூறினார்கள்: பின்னர் அன்னார் எங்களிடத்தில் வந்தார். அப்போது நாங்கள் அன்ஸாரின் ஒரு கூட்டத்தினருடன் இருந்தோம். அபூ மூஸா அஷ்அரி அவர்கள் கூறினார்கள்: அன்ஸார் கூட்டத்தினரே! மற்ற மக்களை விடவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸை நீங்கள் அதிகம் அறிந்தவர்கள் இல்லையா? اَلْاِسْتِئْذَانُ ثَلَاثٌ؟ (அதாவது மூன்று முறை அனுமதி கேட்க வேண்டும். உங்களுக்கு அனுமதி தரப்பட்டால் நீங்கள் வீட்டிற்குள் செல்ல வேண்டும். அனுமதி வழங்கப்படாவிட்டால் திரும்பிச் சென்று விடுங்கள்) என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறவில்லையா? இதைக் கேட்ட மக்கள் நகைத்தார்கள்.

அபூ சயீத் குத்ரி அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது தலையை அபூ மூஸா அஷ்அரி அவர்களை நோக்கி உயர்த்தி இவ்வாறு கூறினேன்: அதாவது இது தொடர்பாக தங்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ அதில் நானும் பங்குதாரர் ஆவேன். சரி! ஆகட்டும். நீங்கள் சரியாக கூறியுள்ளீர்கள் என்று நான் சாட்சியம் வழங்குகின்றேன் என்று கூறினார். அறிவிப்பாளர் கூறுகின்றார்: பின்னர் அவரும் அதாவது அபூ சயீத் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார். அன்னாரிடம் அந்த ஹதீஸைப் பற்றிய செய்தியை கூறினார். அப்போது ஆகட்டும். நான் இந்த ஹதீஸைப் பற்றி அறிந்திருக்கவில்லை. தற்போது எனக்கு தெரிந்து விட்டது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (சுனன் திர்மிதி... ஹதீஸ் எண் 2690)

சஹீஹ் முஸ்லிமில் அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருடன் வேறு சில மக்களும் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடமிருந்து எழுந்து சென்று விட்டார்கள். ஆனால் அன்னார் திரும்பி வருவதற்கு தாமதமாகி விட்டது. அன்னார் எங்களிடமிருந்து பிரிந்து விடக் கூடாதே என்று நாங்கள் அஞ்சினோம். மேலும் நாங்கள் பதற்றமடைந்தோம். மேலும் எழுந்து நின்றோம். எல்லாரையும் விட முதலில் எனக்கு அதிக கவலை ஏற்பட்டது. எனவே நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தேடுவதற்காக வெளியேறினேன். எந்த அளவுக்கென்றால் பனு நஜ்ஜாரின் பகுதியில் அன்ஸாருக்கு சொந்தமான ஒரு தோட்டம் இருந்தது. நான் அதை சுற்றி வலம் வந்தேன். கதவை தேடினேன். ஆனால் எனக்கு கதவு கிடைக்கவில்லை. ஆனால் வெளியில் ஒரு பெரிய ஓடை ஒரு கிணற்றிலிருந்து வெளியேறி தோட்டத்திற்குள் செல்வதை பார்த்தேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஊர்ந்து கொண்டு உள்ளே நுழைந்து விட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்று விட்டேன். அபூஹுரைராவா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஆம்! என்று நான் கூறினேன். என்ன விஷயம்? என்று அன்னார் கேட்டார்கள். தாங்கள் எங்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தீர்கள். பின்னர் தாங்கள் (ஸல்) எழுந்து விட்டீர்கள். ஆனால் திரும்பி வருவதற்கு தங்களுக்கு காலதாமதம் ஆகி விட்டது. எனவே தாங்கள் எங்களை விட்டு பிரிந்து விடக் கூடாதே என்று அஞ்சினோம். மேலும் நாங்கள் பதற்றமடைந்து விட்டோம். எல்லாரையும் விட முதலில் எனக்கு கவலை ஏற்பட்டது. மேலும் நான் இந்த தோட்டத்திற்கு அருகில் வந்தேன். மேலும் நரி ஊர்வதைப் போன்று ஊர்ந்து கொண்டு இதில் நுழைந்து விட்டேன். அந்த மக்கள் எனக்கு பின்னால் உள்ளார்கள் என்று நான் கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் தனது காலணியை தந்தார்கள். மேலும் அபூஹுரைராவே! எனது இந்த இரண்டு காலணிகளை எடுத்துச் செல்லுங்கள். மேலும் இந்த தோட்டத்திற்கு வெளியில் யாரை உம்மை சந்தித்தாலும் அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்ற இந்த விஷயத்தின் மீது எவர் உள்ளத்தால் நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவருக்கு இந்த விஷயத்தின் காரணமாக சுவர்க்கத்தின் நற்செய்தியை வழங்கி விடுங்கள் என்று கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் சென்றபோது முதன் முதலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே கிடைத்தார்கள். அபூஹுரைராவே! இந்த காலணி எப்படி வந்தன? என்று அன்னார் கேட்டார்கள். இவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலணியாகும். அன்னார் (ஸல்) அவர்கள் இதை அடையாளமாக எனக்கு வழங்கியுள்ளார்கள். மேலும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்ற விஷயத்தின் மீது எவர் நம்பிக்கை வைத்துள்ளாரோ அவருக்கு சுவர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்குவதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கோபத்தில் வேகமாக எனது நெஞ்சில் கையால் அடித்தார்கள். மேலும் நான் பின் பக்கமாக விழுந்து விட்டேன். அபூஹுரைராவே! திரும்பிச் செல்வீராக! என்று அன்னார் கூறினார்கள். எந்த நன்மைக்கும் அவசியம் இல்லை. யாருக்கும் எதனையும் கூற வேண்டாம். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திரும்பிச் சென்றேன். நான் அழத் தொடங்கினேன். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் எனக்குப் பின்னாலேயே வந்தடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூஹுரைராவே! உமக்கு என்னவாகி விட்டது? என்று கேட்டார்கள். அப்போது நான் உமர் அவர்களை சந்தித்தேன். தாங்கள் என்னிடம் கூறி அனுப்பியதைப் பற்றி அன்னாரிடம் கூறியபோது அன்னார் எனது நெஞ்சில் வேகமாக கையால் அடித்து விட்டார்கள். மேலும் நான் பின் பக்கமாக விழுந்து விட்டேன் என்று கூறினேன். மேலும் அன்னார் என்னை திரும்பிச் செல்லும்படி கூறினார்கள் என்று கூறினேன்.

உமரே! நீங்கள் ஏன் அவ்வாறு செய்தீர்கள்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும், தந்தையும் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. தாங்கள் தங்களது காலணிகளுடன் அபூஹுரைரா (ரலி) அவர்களை அனுப்பினீர்களா? மேலும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்றும் சாட்சி கூறி தனது உள்ளத்தால் அதில் நம்பிக்கை கொள்பவருக்கு சொர்க்கத்தின் நற்செய்தியை வழங்கிவிடும்படியும் தாங்கள் அன்னாரை அனுப்பி வைத்தீர்களா? என்று கேட்டார்கள். ஆம்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அவ்வாறு செய்யாதீர்கள். ஏனென்றால் பின்னர் மக்கள் இதன் மீது நம்பிக்கை கொண்டு அமர்ந்து விடுவார்கள் என்று நான் அஞ்சுகிறேன். எனவே அவர்களை தாங்கள் அமல் செய்ய விடுங்கள். அவர்கள் உண்மையான நம்பிக்கையாளர்களாக ஆகி விடுவதற்கு நன்மைக்கான என்ன கட்டளைகள் உள்ளனவோ அதன்படி அவர்களை அமல் செய்ய விடுங்கள். இல்லையென்றால் லாயிலாஹா இல்லல்லாஹ் என்று கூறுவது சொர்க்கத்தின் நற்செய்தியாகும் என்ற விஷயத்தில் மட்டுமே மக்கள் நிலைபெற்று விடுவார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, நல்லது. விட்டு விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான்.... ஹதீஸ் எண் 147)

சரி தான். அவ்வாறே செய்வோம். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பு மிகவும் எச்சரிக்கை உணர்வை கொண்டிருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அஞ்சி ஷய்த்தானும் கூட ஓடி விடுகின்றான். இது தொடர்பாகவும் சில அறிவிப்புகள் உள்ளன. சஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் சஅத் பின் வகாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் உள்ளே வருவதற்கு அனுமதி வேண்டினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சில பெண்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அதிக செலவீனங்களை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் குரல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குரலை விட உரத்த குரலாக இருந்தது. ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் உள்ளே வருவதற்கு அனுமதி கேட்டபோது அந்தப் பெண்கள் உடனடியாக எழுந்து திரைக்கு பின்னால் சென்று விட்டார்கள். அப்போது ஹஸ்ரத்


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)



**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு உள்ளே வருவதற்கு அனுமதி நல்கினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களை எப்போதும் மகிழ்ச்சியாக வைப்பானாக என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அப்போது என்னுடன் அமர்ந்திருந்த அந்த பெண்களை எண்ணி ஆச்சரியம் கொள்கின்றேன். தங்களின் வருகையின் குரலைக் கேட்டதும் விரைவாக திரைக்கு பின்னால் சென்று விட்டார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உள்ளபடியே தங்களிடம் அச்சம் கொள்வதற்கு தாங்கள் மிகவும் தகுதி படைத்தவர் ஆவீர்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் உங்களது ஆன்மாக்களின் எதிரிகளே! நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அஞ்சாமல் எனக்கு அஞ்சுகின்றீர்களா? என்று உரத்த குரலில் அந்த பெண்களை நோக்கி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு அந்த பெண்கள் ஆம்! தாங்கள் மிகக் கடின இயல்பு படைத்தவரும், கடின உள்ளமும் கொண்டவரும் ஆவீர்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறல்ல என்று அந்த பெண்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கதாபின் மகனே கேளுங்கள்! எந்த இறைவனின் கையில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவனின் மீது ஆணையாக! ஷய்த்தான் எப்போதெல்லாம் உங்களின் வழிப்பாதையில் (உங்களை) சந்தித்தானோ அப்போது நிச்சயமாக அவன் தனது அந்த வழியை விட்டு விட்டு மாற்று வழியை மேற்கொண்டு விடுகின்றான்.

(சஹீஹ் புகாரி, கிதாப் ஃபஸாயிலுல் அஸ்ஹாப், பாப் ஃபஸாயில் ஹஸ்ரத் உமர் (ரலி) – ஹதீஸ் எண் 3683)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். நாங்கள் சப்தத்தை கேட்டோம். பிள்ளைகளின் சப்தங்களையும் கேட்டோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து விட்டார்கள். அங்கு அபிசீனியாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி நடனமாடிக் கொண்டிருந்தார். பிள்ளைகள் அவரை சுற்றி ஒன்றுகூடி இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே! செல்லுங்கள். சென்று அங்கு நடப்பதை பாருங்கள் என்று கூறினார்கள். நான் வந்தேன். நான் எனது முகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோளில் வைத்து பார்க்கத் தொடங்கினேன். எனது முகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலை மற்றும் தோள்களுக்கு மத்தியில் இருந்தது. நீங்கள் இன்னும் திருப்தியடையவில்லையா? என்று அன்னார் (ஸல்) அவர்கள் என்னிடம் கேட்கத் தொடங்கினார்கள். இன்னும் இல்லை. தங்களிடம் எனக்கு இன்னும் எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது? என்பதை நான் பார்க்க விரும்புகின்றேன் என்று நான் கூறினேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தபோது மக்கள் அந்த பெண்ணை விட்டு ஓடி விட்டனர்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஜின் மற்றும் மனிதனின் ஷய்த்தான் உமரைக் கண்டு ஓடி விடுகின்றான் என்பதை நான் பார்க்கின்றேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு நான் அங்கிருந்து திரும்பி வந்து விட்டதாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3691)

ஹஸ்ரத் புரைதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு போருக்காக புறப்பட்டார்கள். அன்னார் திரும்பி வந்தபோது ஓர் அடிமைப் பெண்மணி வந்து இவ்வாறு கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களை பாதுகாப்பாக திருப்பிக் கொண்டு வந்தால் நான் தங்களுக்கு முன்னால் முரசு அறைந்து பாட்டு பாடுவேன் என்று நான் எண்ணம் கொண்டிருந்தேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் இதனை வேண்டுதலாக செய்துள்ளீர்கள் என்றால் முரசு அறைந்து கொள்ளுங்கள். இல்லையென்றால் கூடாது என்று கூறினார்கள்.

அந்த வகையில் அவர் முரசு அறைந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். அந்தப் பெண்மணி முரசு அறைந்து கொண்டிருந்தார். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் வந்தார்கள். அப்போதும் அந்தப் பெண்மணி முரசு அறைந்து கொண்டிருந்தார். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். அப்போதும் அந்தப் பெண்மணி முரசு அறைந்து கொண்டிருந்தார். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். அப்போது அந்தப் பெண்மணி முரசை தனக்குப் பின்னால் மறைத்துக் கொண்டார். மேலும் அதற்கு மேலே அமர்ந்து கொண்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமரே! ஷய்த்தான் கூட உங்களுக்கு அஞ்சுகின்றான். நான் அமர்ந்திருந்தபோது இவர் முரசு அறைந்து கொண்டிருந்தார். பின்னர் அபூபக்ர் வந்தார். இவர் முரசு அறைந்து கொண்டிருந்தார். அடுத்து அலி வந்தபோதும் இவர் முரசு அறைந்து கொண்டிருந்தார். பின்னர் உஸ்மான் வந்தபோதும் இவர் முரசு அறைந்து கொண்டிருந்தார். ஆனால் உமரே! நீர் வந்தபோது இந்தப் பெண்மணி முரசை (கீழே) வைத்து விட்டார்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்.... ஹதீஸ் எண் 3690)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: ஷய்த்தான் உங்களை எந்த வழியில் பார்த்தாலும் அவன் மாற்று வழியை மேற்கொண்டு விடுகின்றான். உங்களிடம் அஞ்சுகின்றான். ஷய்த்தான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமிருந்து ஓர் ஆண்மையற்றவனாகவும், இழிவடைந்தவனைப் போன்றும் ஓடுகின்றான் என்பதற்கு இந்த விஷயத்திலிருந்து சான்று கிடைக்கின்றது.

(நூருல் ஹக், பாகம் 1 அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 143)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவிலும், உள்ளத்திலும் உண்மை மற்றும் அமைதி நிறைந்திருந்தது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை கூறினார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் உமரின் நாவிலும், உள்ளத்திலும் உண்மையை வைத்து விட்டான்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3682)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் தமது சகோதர் ஃபஸ்ல் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன். அதாவது உமர் பின் கத்தாப் என்னுடன் இருக்கின்றார். எங்கு நான் விரும்புகின்றேனோ அங்கு நான் அவருடன் செல்கின்றேன். மேலும் எனக்குப் பிறகு உமர் பின் கத்தாப் எங்கு இருப்பாரோ அவருடன் உண்மை இருக்கும்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 21)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவிலும், உள்ளத்திலும் அமைதி நிலைபெற்றிருக்கின்றது என்று நாங்கள் பரஸ்பர உரையாடல்களில் பேசி வந்தோம்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 12 கிதாபுல் ஃபஸாயில், ஃபஸாயில் உமர் அறிவிப்பு எண் 35870 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது ஒரு துணைவியாரிடம் கூறினார்கள்: எனது பயணத்திற்கான பொருட்களை ஒன்றுகூட்ட தொடங்குங்கள். அன்னார் பயணத்திற்கான ஏற்பாடுகளையும் செய்தார்கள். மேலும் எனக்காக சத்து எனும் உணவுப் பொருட்களை அல்லது தானியங்கள் போன்றவற்றை அரைத்து தயார் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். இதுபோன்ற உணவுகளே அந்த நாட்களில் இருந்தன. எனவே அன்னார் மண் போன்றவற்றை அந்த தானியங்களிலிருந்து அகற்ற தொடங்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மகளின் வீட்டிற்கு வந்தார்கள். இந்த ஏற்பாடுகளை அன்னார் பார்த்தார்கள். அப்போது ஆயிஷாவே! இது என்ன நடக்கின்றது? இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஏதேனும் ஒரு பயணத்திற்கான ஏற்பாடா? என்று கேட்டார்கள். அதற்கு பயணத்திற்கான ஏற்பாடாகவே தோன்றுகிறது என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்திற்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு கூறியுள்ளார்கள். ஏதும் ஒரு போருக்கான திட்டம்

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

உள்ளதா? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு, ஒன்றும் தெரியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள் என்று கூறினார்கள். நாங்கள் அவ்வாறு செய்கின்றோம். மற்றபடி எதுவும் தெரியாது என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறினார்கள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களையும் அழைத்தார்கள். ஹுஸா கோத்திரத்தைச் சேர்ந்த நபர் வந்தார். இது பற்றி உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார்கள். பின்னர் நடந்த சம்பவத்தை கூறினார்கள். அவர்கள் நம்பிக்கை துரோகம் செய்து விட்டனர் என்ற செய்தியை இறைவன் எனக்கு இந்த சம்பவத்திற்கு முன்பே வழங்கி விட்டான். அதாவது மக்காவாசிகள் நம்பிக்கை துரோகம் செய்திருந்தனர். நாம் அவர்களுடன் உடன்படிக்கை செய்திருக்கின்றோம். தற்போது நாம் அஞ்சிவிடுவதும், மக்காவாசிகளின் வீரத்தையும் ஆற்றலையும் பார்த்து அவர்களை எதிர்ப்பதற்கு தயாராகாமல் இருப்பதும் ஈமானிற்கு எதிரானதாகும். எனவே நாம் அங்கு செல்ல வேண்டும். உங்களது கருத்து என்ன? என்று கேட்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களே! அவர்களுடன் தாங்கள் உடன்படிக்கை செய்துள்ளீர்கள். அதுமட்டுமல்ல அவர்கள் தங்களின் சமுதாயம் ஆவார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். தாங்கள் தங்களது சமுதாயத்தையே அழிப்பீர்களா? என்பது அதன் பொருளாக இருந்தது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாம் எமது சமுதாயத்தை அழிக்க மாட்டோம். மாறாக, உடன்படிக்கையை முறிப்பவர்களை அழிப்போம் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் தங்களின் கருத்து என்ன? என்று கேட்டார்கள். அப்போது இவ்வாறு கூறினார்கள்: பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். அந்த நாள் கிடைப்பதற்காகவும், நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களை பாதுகாப்பதில் நிராகரிப்பவர்களுடன் போரிட வேண்டுமென்பதற்காகவும் நான் தினமும் துஆக்கள் செய்து கொண்டிருந்தேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் மென்மை உள்ளம் கொண்டவர் ஆவார். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவிலிருந்து உண்மையான கூற்று அதிகம் வெளிப்படுகின்றது. ஆயத்தமாகுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் இந்த அறிவிப்பை சுற்று வட்டாரத்திலிருந்த கோத்திரங்களுக்கு அனுப்பினார்கள். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது நம்பிக்கை வைத்துள்ள ஒவ்வொரு நபரும் ரமலானின் ஆரம்ப நாட்களில் மதீனாவில் ஒன்று கூடட்டும் என்ற அறிவிப்பை அனுப்பினார்கள். எனவே படை ஒன்றுகூடத் தொடங்கியபோது பல ஆயிரம் நபர்களைக் கொண்ட படை தயாராகி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரிடுவதற்காக வருகை தந்தார்கள்.

(ஸேரே ரூஹானி (7), அன்வாலுல் உலூம் தொகுதீ 24 பக்கம் 260, 261)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மேன்மைகள் பற்றி ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அபூசயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இல்லியீன் வாசிகளில் ஒருவர் சொர்க்கவாசிகளை எட்டிப் பார்ப்பார். அவரது முகத்தின் காரணமாக சொர்க்கம் பிரகாசமாக இருக்கும். ஒரு வகையில் ஒரு ஒளிமயமான நட்சத்திரமாக இருக்கும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அவர்களைச் சார்ந்தவர் ஆவார். இருவரும் எவ்வளவு சிறப்பு மிக்கவர்களாக உள்ளனர்.

(சுனன் அபூதாவூது, கிதாபுல் ஹரூஃப் ஹதீஸ் எண் 3987)

அபூ உஸ்மான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை ஸாதுஸ் ஸலாஸில் படையின் தளபதியாக நியமித்து அனுப்பி வைத்தார்கள். அந்த காலத்தின் பயணத்திற்கான வழிமுறையின்படி இந்தப் பயணம் மதீனாவிலிருந்து அநேகமாக ஒரு நாள் பயணத்திற்கான தொலைவாக இருந்தது. மேலும் வாதியுல் குராவிலிருந்து முன்னேறி ஜுஸா கோத்திரத்தின் பகுதியில் மகே எனும் ஒரு கிணறு இருந்தது. ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அன்னாரிடத்தில் திரும்பி வந்தபோது நான் அவர்களிடம் கேட்டேன். மக்களில் தங்களுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர் யார்? அப்போது ஆயிஷா என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆண்களில் தங்களுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர் யார் என்று நான் கேட்டேன். அப்போது ஆயிஷாவின் தந்தை என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அடுத்து யார்? என்று நான் கேட்டபோது உமர் (ரலி) என்று அன்னார் கூறினார்கள். அதன் பிறகு அன்னார் (ஸல்) பல ஆண்களின் பெயரை குறிப்பிட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி ஹதீஸ் எண் 4358)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் சகோதரர்களான தமது சஹாபிகளிடம் வந்து விடுவார்கள். மேலும் அவர்களுடன் அமர்ந்திருப்பார்கள். அவர்களில் அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) அவர்களும் இருப்பார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோரைத் தவிர வேறு எவரும் அவர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்வையை உயர்த்தி பார்க்க மாட்டார்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3668)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் புறப்பட்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் பள்ளிவாசலில் நுழைந்தார்கள். அப்போது அவர்களில் அன்னார் (ஸல்) அவர்களின் வலப்பக்கத்தில் ஒருவரும், அன்னாரின் இடப்பக்கத்தில் ஒருவரும் இருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் அவர்கள் இருவரின் கரங்களையும் பிடித்து இருந்தார்கள். மேலும் இதேபோன்றே நாங்கள் கியாமத் நாளன்று எழுப்பப்படுவோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3669)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹன்தப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரையும் பார்த்து இவர்கள் இருவரும் காதும், கண்ணும் ஆவர் என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3671)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தாங்களே எல்லாரையும் விட சிறந்த மனிதர் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: கேளுங்கள்! அப்படியென்றால் கேட்டுக் கொள்ளுங்கள். உமரை விட சிறந்த மனிதரிடம் சூரியன் உதிப்பதில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன் என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3684)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; பூமி வெளிப்படுத்தும் முதல் நபர் நானாக இருப்பேன். பின்னர் அபூபக்ரும், உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களும் இருப்பார்கள். பின்னர் நான் ஜன்னத்துல் பகீஃ வாசிகளிடம் செல்வேன். அப்போது அவர்கள் என்னுடன் எழுப்பப்படுவார்கள். பின்னர் நான் மக்காவாசிகளுக்காக காத்திருப்பேன். எந்த அளவுக்கென்றால் ஹரமைனுக்கு மத்தியில் நான் எழுப்பப்படுவேன்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3692)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களிடத்தில் சொர்க்கவாசிகளில் ஒருவர் வருகின்றார் என்று கூறியபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். பின்னர் உங்களிடம் சொர்க்கவாசிகளில் ஒருவர் வருகின்றார் என்று கூறியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3694)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை குறித்து இவர்கள் இருவரும் சொர்க்கவாசிகளில் முன்னவர்கள் மற்றும் பின்னவர்கள் அனைவரிலும் பெரிய வயதைக் கொண்ட அனைத்து மக்களுக்கும் தலைவர்கள் ஆவர். நபிமார்கள் மற்றும் தூதர்களைத் தவிர என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3664)

ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்குப் பிறகு அபூபக்ர் மற்றும் உமர் ஆகிய இருவரையும் பின்பற்றுங்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3662)

ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒவ்வொரு நபிக்கும் விண்ணவர்களைச் சார்ந்தவர்களில் இரண்டு அமைச்சர்கள் இருப்பர். மண்ணுலகைச் சார்ந்தவர்களிலும் இரு அமைச்சர்கள் இருப்பர். விண்ணுலகைச் சார்ந்த எனது இரு அமைச்சர்களில் ஜிப்ரீல் மற்றும் மீகாயீல் ஆவர். மண்ணுலகைச் சார்ந்தவர்களில் எனது இரண்டு அமைச்சர்கள் அபூபக்ர் மற்றும் உமர் ஆவர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3680)

ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். நான் எப்போது வரை உங்களுக்கு மத்தியில் இருப்பேன் என்பது எனக்குத் தெரியாது. எனவே நீங்கள் எனக்குப் பிறகு இந்த இருவரையும் பின்பற்றுங்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் பக்கம் சைகை செய்தார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3663)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள், உங்களில் யார் கனவு கண்டுள்ளார்? என்று கேட்டார்கள். நான் கண்டேன் என்று ஒருவர் கூறினார். தராசு போன்ற ஒன்றை நான் கண்டேன். அது விண்ணிலிருந்து இறங்கியது. தாங்கள் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் எடை போடப்பட்டீர்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட தாங்கள் எடை அதிகமாக இருந்தீர்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் எடை போடப்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடை மிக்கவர்களாக இருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோர் எடை போடப்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எடை மிக்கவராக இருந்தார்கள். அதன் பிறகு அந்த தராசு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் அதிருப்தியின் தாக்கத்தை கண்டோம். மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. அந்த கனவை கேட்ட பிறகு இது நபித்துவத்தின் கிலாஃபத் ஆகும். இதன் பிறகு அல்லாஹ் யாருக்கு விரும்புவானோ அரசாட்சியை வழங்கி விடுவான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் அபூதாவூது, கிதாபுஸ் சுன்னா... ஹதீஸ் எண் 4634, 4635)

அப்தே கைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடையில் எழுந்து நின்றார்கள். மக்களே! நான் உங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த சமுதாயத்தின் எல்லாரையும் விட சிறந்த மனிதரைப் பற்றி கூறட்டுமா? என்று கேட்டார்கள். கண்டிப்பாக என்று மக்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் சிறிது நேரம் வரை மௌனமாக இருந்தார்கள். பின்னர் மக்களே நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு இந்த சமுதாயத்தில் எல்லாரையும் விட சிறந்த மனிதரைப் பற்றி உங்களுக்கு கூறட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆவார்கள் என்று அன்னார் கூறினார்கள்.

(இமாம் ஸஃப்ஹானி அஅவவர்கள் எழுதிய ஹுல்யத்துல் அவ்லியா என்ற நூல் தொகுதி 7 பக்கம் 205 ஹதீஸ் எண் 10323 – 2007 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அபூ ஜுஹைஃபா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடமிருந்து செவியுற்றேன். அதாவது இந்த உம்மத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மிகச் சிறந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) ஆவார்கள்.

(இமாம் ஸஃப்ஹானி அஅவவர்கள் எழுதிய ஹுல்யத்துல் அவ்லியா என்ற நூல் தொகுதி 7 பக்கம் 205 ஹதீஸ் எண் 10325 – 2007 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

இந்த நற்குறிப்பு இன்னும் தொடர்கின்றது. எதிர்காலத்திலும் இன்ஷா அல்லாஹ் எடுத்துரைக்கப்படும். சிறிது காலம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த நற்குறிப்பு நடைபெறும்.

தற்போது நான் தொழுகைக்குப் பிறகு சில ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன். அதனை இங்கு குறிப்பிட்டு விடுகின்றேன். பெஷவாரைச் சேர்ந்த நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய காம்ரான் அஹ்மது சாஹிப் ஷஹீத் அவர்களுடையதாகும். நவம்பர் 9 ஆம் தேதி எதிரிகள் அன்னாரின் அலுவலகத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தி அன்னாரை ஷஹீதாக்கி விட்டனர். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

ஷஹீத் மர்ஹூமின் வயது 44 ஆகும். பெஷாவரில் மதிப்பிற்குரிய ஷஃபீகுர் ரஹ்மான் சாஹிப் என்ற ஓர் அஹ்மதியின் தொழிற்சாலையில் கணக்காளராக பணி செய்து வந்தார்கள். ஆயுதம் ஏந்திய ஒரு நபர் அலுவலகத்திற்கு வந்து துப்பாக்கியால் சுட்டு விட்டான். அன்னாரை நான்கு குண்டுகள் துளைத்தன. நிகழ்விடத்திலேயே அன்னார் ஷஹீதாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

சம்பவத்திற்குப் பிறகு கொலையாளி தப்பியோடி விட்டான். ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அன்னாரின் தந்தை மதிப்பிற்குரிய நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களின் தாய்வழி பாட்டனாராகிய ஹஸ்ரத் நபி பக்ஷ் சாஹிப் அவர்களின் மூலம் அஹ்மதிய்யத் வந்தது. அன்னார் 1902 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய கரத்தில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டார்கள்.

ஷஹீது மர்ஹூம் சில காலங்களுக்கு முன்பு தனது சகோதரருடன் இணைந்து ஒரு கடையை வாங்கி அதை ஒரு அலுவலகமாக ஆக்கி இருந்தார்கள். கடையின் முதலாளி, அன்னார் அஹ்மதியாக இருந்த ஒரே காரணத்தால் ஒரு நாள் காலக்கெடு கொடுத்து நோட்டீஸ் வழங்கி கடையை காலி செய்ய வைத்து விட்டார். அதன் பிறகு அந்த தெருவிற்கு கத்மே நுபுவ்வத் தெரு என பெயர் வைக்கப்பட்டது. அருகில் வேறு ஒரு கடை பெறப்பட்டபோது எதிரிகள் அங்கும் ஊர்வலம் நடத்தி அந்த கடையையும் காலி செய்ய வைத்து விட்டார்கள். அன்னாரின் வீட்டிற்கு அருகில் அக்டோபர் மாதத்தில் பெரிய மாநாடு நடத்தப்பட்டது. ஜமாஅத்திற்கெதிராக மிகவும் கடுமையான ஆத்திரமூட்டும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. இந்த பகுதியில் இவ்வளவு பெரிய கூட்டத்தை ஒருபோதும் நாங்கள் கண்டதில்லை. இந்த பகுதியில் கடுமையான வெறுப்பிற்கான சூழல் உருவாகி விட்டது என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஷஹீது மர்ஹூம் பல ஆண்டு காலமாக ஒரு தனியார் நிறுவனத்தின் கணக்கு வழக்குகளையும் பார்த்து வந்தார்கள். எதிர்ப்பின் காரணமாக அவர்களும் அங்கிருந்து அவரை நிறுத்தி விட்டார்கள். தங்களின் ஒழுக்கமும், நேர்மையும் எப்படிப்பட்டதென்றால் நாங்கள் உங்களை விட்டு விட விரும்பவில்லை. சில நிமிடத்திற்காக எங்களிடம் வந்து செல்லுங்கள் என்று அந்த மக்கள் கூறினர். அன்னார் ஷஹீதாக்கப்பட்ட செய்தி கிடைத்ததும் அந்த மக்களும் மிகவும் வேதனைப்பட்டனர். ஷஹீது மர்ஹூம் எண்ணற்ற நற்பண்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்.

அன்னாரின் தந்தையார் கூறுகின்றார்கள்: மிகவும் காலதாமதமாக இரவில் வீட்டிற்கு வந்ததால் இவ்வளவு காலதாமதமாக வந்துள்ளாயே! என்ன காரணம்? என்று ஒரு நாள் நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் இவ்வாறு கூறினார்: அஹ்மதிய்யத்தின் இன்ன எதிரி ஒருவர் இருக்கின்றார். அந்த எதிரியின் குடும்பத்தின் ஒரு பெண்ணிற்கு இரத்தத்திற்கான தேவை இருந்தது. அவருக்கு இரத்தம் கொடுத்து விட்டு வந்துள்ளேன். இந்த மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பலவீனமானவர்கள். ஏழைகள் என்பதால் அவர்களுக்கு நான் இரத்தம் கொடுத்துள்ளேன் என்று கூறினார்.

அவர்களுக்கு அவர்களுடைய நடைமுறை. நமக்கு நமது நடைமுறை. மர்ஹூம் எப்போதும் தொண்டாற்றுவதில் முன்னணியில் இருந்தார்கள். ஜமாஅத் தொண்டுகளிலும், டியூட்டிகளிலும் எல்லாரையும் விட முதலில் வந்து விடுவார்கள். எப்போதும் மிகவும் ஆபத்தான இடத்தில் (டியூட்டி கொடுக்க) சுயமாக நின்று விடுவார்கள். பின்னர் ஹிஜ்ரத்திற்காக அன்னாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டபோது அன்னார் இவ்வாறு கூறினார்கள்: நாம் இங்கிருந்து சென்று விட்டால் பின்னர் பலவீனமான அஹ்மதிகளின் பிரச்சனைகள் அதிகரித்து விடும். சந்தாக்களை வழங்குவதில் அன்னார் மிகவும் தனித்தன்மை கொண்டிருந்தார்கள். சந்தாக்கள் கொடுக்கும்படி கூறும் நேரத்தில் எப்போதும் முதல் நேரத்திலேயே

சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். 12, 13 வயதில் ஒரு முறை முபாஹிலா பிரசுரத்தை விநியோகம் செய்த காரணத்தால் அன்னாரை காவல்துறை பிடித்து சிறையில் அடைத்து விட்டது. அடுத்த நாள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஷஹாதத் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் அன்னார் ஒரு கனவு கண்டிருந்தார்கள். ஒரு வயதான பெண்மணி அன்னாருடைய வீட்டை சுத்தம் செய்து கொண்டிருக்கின்றார். மேலும் நான்காவது கலீஃபா அவர்கள் வர இருக்கின்றார்கள் என்று கூறுகின்றார். சிறிது நேரத்திற்குப் பிறகு ஹுஸூர் (ரஹ்) அவர்கள் வருகை தந்து விட்டார்கள். மேலும் ஷஹீது மர்ஹூம் அவர்களின் கரங்களை பிடித்துக் கொண்டார்கள். நாம் ஒன்றாக இருப்போம். நீ என்னுடனேயே இருக்க வேண்டும் என்று மிக அன்புடன் கூறினார்கள்.

இறையருளால் வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார்கள். மென்மையான இயல்பு கொண்டவராகவும், அந்த பகுதியின் எல்லோரின் அன்பையும் பெற்ற நபராகவும் இருந்தார்கள். கண்ணியமிக்க மனம் படைத்தவராகவும், ஏழைகளின் மீது அனுதாபம் கொள்பவராகவும், கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு கொண்டவராகவும் மர்ஹூம் திகழ்ந்தார்கள். மர்ஹூம் தமக்குப் பிறகு தனது தந்தை நஸீர் அஹ்மது சாஹிப் மற்றும் தாய், மனைவி மேலும் முறையே 13 வயது, 11 வயது, 8 வயது கொண்ட மூன்று பிள்ளைகளை விட்டுச் சென்றுள்ளார்கள்.

அல்லாஹ் அந்த பிள்ளைகளுக்கும் பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அனைவருக்கும் தைரியத்தையும், பொறுமையையும் வழங்குவானாக. மேலும் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மர்ஹூமின் தாயாரும் நோயாளியாக உள்ளார்கள். அன்னாருக்காகவும் துஆ செய்யுங்கள். கேன்ஸர் நோயாளியாக உள்ளார்கள். அல்லாஹ் அருள் செய்வானாக.

இரண்டாவது நற்குறிப்பு டாக்டர் மிர்ஸா நுபைர் அஹ்மது மற்றும் அவர்களது மனைவி ஆயிஷா அம்பர் செய்யது அவர்களுடையதாகும். அமெரிக்காவில் Milwakee எனும் இடத்தில் நடந்த ஒரு விபத்தில் அவர்கள் இருவரும் மரணமடைந்து விட்டனர். டாக்டர் மிர்ஸா நுபைர் அஹ்மது அவர்களின் வயது 35 ஆகும். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாக இருந்த ஹஸ்ரத் டெப்டி மியான் முஹம்மது ஷரீஃப் சாஹிப் மர்ஹூமின் கொள்ளுப் பாட்டனார் ஆவார்கள். மர்ஹூமின் தந்தைவழிப் பாட்டி மாஸ்டர் அப்துர் ரஹ்மான் சாஹிப் (ரலி) அவர்களின் மகளாக இருந்தார்கள். அன்னாரின் தாய்வழி கொள்ளுப் பாட்டனாரும் சஹாபியாக இருந்தார்கள். மர்ஹூமின் குடும்பத்தில் ஏராளமான சஹாபிகள் இருந்துள்ளனர். 2012 ஆம் ஆண்டு மர்ஹூம் அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்து விட்டார். 17 வது வயதில் அன்னாருக்கு வஸிய்யத் அமைப்பில் இணையும் நற்பேறு கிடைத்துள்ளது. மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆக தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்து வந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: மர்ஹூம் மில்வாக்கி எனும் இடத்தில் பள்ளிவாசலுக்காக ஒரு புதிய கட்டிடத்தை வாங்கும் வகைக்கு உள்ளூர் ஜமாஅத்தில் மிக அதிகமான நன்கொடை வழங்கக் கூடிய சகோதரர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் தமது நினைவாக தனது தந்தை மிர்ஸா நஸீர் அஹ்மது சாஹிபையும் (தற்போது இஸ்லாமாபாத்தில் உமூரே ஆமா செயலராக உள்ளார்கள்), தாயாரையும் (இஸ்லாமாபாத் லஜ்னா அமைப்பின் மண்டல சதராக உள்ளார்கள்). மேலும் நாதியா என்ற சகோதரியையும், இரண்டு சகோதரர்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னாரின் மனைவி ஆயிஷா அம்பர் சாஹிபா அவர்களும் விபத்தில் மரணமடைந்து விட்டார்கள். அன்னார் ஜப்பானின் செய்யது ஸஜாத் அஹ்மது ஷா சாஹிபின் மகளாக இருந்தார்கள். தற்போது ஜப்பானில் முரப்பியாக இருக்கின்ற செய்யது இப்ராஹீம் சாஹிப் அவர்களின் சகோதரி ஆவார்கள். பிக்லாவைச் சேர்ந்த செய்யது அப்துர் ரஹீம் ஷா சாஹிப் அவர்கள் மூலமாக மர்ஹூமாவின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் தோன்றியது. 1930 ஆம் ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கரங்களில் அன்னார் பைஅத் செய்திருந்தார்கள். நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஆயிஷா அம்பர் அவர்களின் மரணமும் தனது கணவருடன் நிகழ்ந்த விபத்தில் இரண்டு நாட்களுக்குப் பிறகு ஏற்பட்டுள்ளது.

மர்ஹூமா MTA International–ன் ஒரு சுறுசுறுப்புமிக்க குழுவின் ஊழியராக இருந்தார்கள். எனது குத்பாக்களை ஜப்பானிய மொழியில் நேரடி மொழியாக்கமும் செய்து வந்தார்கள். ஜப்பானிய மொழியில் Sub-Titeling செய்து வந்தார்கள். மர்ஹூமா தனது நினைவாக தனது தந்தை செய்யது ஸஜாத் அஹ்மது அவர்களையும், தாய் செய்யது துர்ரே ஸமீன் செய்யது அவர்களையும், மூன்று சகோதரர்களையும், ஒரு சகோதரியையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னாரின் சகோதரரான இப்ராஹீம் சாஹிப் ஜப்பானில் ஜமாஅத் முரப்பியாக இருக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ஏராளமான ஜமாஅத் பணிகளில் எனக்கு உதவி செய்துள்ளார்கள். லெக்சர் லாஹூர், எமது இறைவன் போன்ற நூல்களை ஜப்பானிய மொழியில் மொழியாக்கம் செய்வதில் எனக்கு உதவி செய்து வந்தார்கள். அன்னார் ஃபார்மஸி படித்த பிறகும் இவ்வளவு சிறந்த மொழியாக்கம் எப்படி செய்து விடுகின்றார்கள் என்பதை எண்ணி நான் மிகவும் ஆச்சரியம் அடைந்துள்ளேன்.

மர்ஹூமாவின் மூத்த சகோதரி ஃபாத்திமா சாஹிபா கூறுகின்றார்கள்: மர்ஹூமாவின் ஒரு டைரி இருந்தது. அது தற்செயலாக என்னிடத்தில் வந்து விட்டது. ஒவ்வொரு பக்கமும் இரண்டு தலைப்புகளைக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் எனது உலக வாழ்க்கை என்றும் மற்றொன்றில் எனது ஆன்மீக வாழ்க்கை என்றும் எழுதப்பட்டிருந்தது. எனது பௌதீக வாழ்க்கை எனும் பக்கத்தில் அன்றாட வாழ்க்கையின் பணிகளையும், உலக நோக்கங்களையும் சுருக்கமாக எழுதியிருந்தார்கள். ஆன்மீக வாழ்க்கை எனும் பக்கத்தில் ஆன்மீக நோக்கங்களையும், ஜமாஅத்தின் குறிப்புகளும், மார்க்க விஷயங்களும் எழுதப்பட்டிருந்தன. ஒவ்வொரு பக்கமும் மிக அழகாகவும், சிந்தித்தும், புரிந்தும் எழுதப்பட்டிருந்தது. காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு சொல்லையும் ஆழமாக கேட்பதும், அதன் படி செயல்படுவதும், மேலும் தனது சகோதர சகோதரிகளுக்கும் அதற்காக அறிவுறுத்துவதும் அன்னாரின் சிறப்பான வழிமுறையாக இருந்தது. ஜப்பானிய தோழிகளுக்கும் நுட்பமான ஞானம் நிறைந்த இஸ்லாத்தின் போதனைகளைப் பற்றி எடுத்துரைத்து வந்தார்கள்.

அல்லாஹ் இரண்டு மர்ஹூம்களுடனும் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு சவுத்ரி நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கராச்சியில் தற்போது கிலிஃப்டன் ஜமாஅத்தில் செகரட்டரி மால் ஆக உள்ளார்கள். ரப்வாவைச் சேர்ந்த சவுத்ரி நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 59 வது வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மரணத்திற்கு முன்பு அன்னார் தனது மனைவிக்கும், மைத்துனருக்கும் ஃபஜ்ர் தொழுகையில் இமாமத் செய்து கொண்டிருந்தார்கள். பின்னர் இரண்டாவது ரக்அத்தின் சஜ்தாவின்போது திடீரென இதயத் துடிப்பு நின்று விட்டதன் காரணமாக அல்லாஹ்வின் சந்நிதானத்தில் ஆஜராகி விட்டார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். தொழுகையின் நிலையில் மரணிப்பதை மிகவும் பெருமைக்குரிய ஒரு மரணம் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 542)

மர்ஹூமின் தந்தையான சவுத்ரி நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு ஒய்வுபெற்ற பிறகு 25 ஆண்டுகள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. மர்ஹூம் விவசாயத்துறையின் நாயிப் நாஸிர் ஆகவும், வகீலாகவும் இருந்துள்ளார்கள். அன்னாரின் இளைய சகோதரரான சவுத்ரி நயீம் அஹ்மது சாஹிப் தற்போது அஞ்சுமன் கருவூலத்தின் அதிகாரியாக உள்ளார்கள். மர்ஹூம் தனது நினைவாக நுஸ்ரத் நஸீர் சாஹிபா என்ற மனைவியை விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாருக்கு பிள்ளைகள் இல்லை. 1972 ஆம் ஆண்டு மர்ஹூம் கராச்சிக்கு இடம் பெயர்ந்தார்கள். அங்கேயே அன்னாரின் வியாபாரமும் இருந்தது. அங்கு பல்வேறு ரீதியில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. அசாதாரண தொண்டிற்கு அன்னார் நற்பேறு பெற்றார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு தாரூர் ரஹ்மத் மேற்கு ரப்வாவைச் சேர்ந்த சவுத்ரி நபி பக்ஷ் சாஹிப் அவர்களின் மனைவியான சர்தாரான் பீபீ சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் குர்தாஸ்பூர் மாவட்டமான பட்டான்கோட்டைச் சார்ந்தவராக இருந்தார்கள். பின்னர் அன்னார் ஹிஜ்ரத் செய்து பாகிஸ்தானிற்கு வந்து விட்டார்கள். முதலில் சியால்கோட் வந்தார்கள். பின்னர் சிந்துவிற்கு சென்று விட்டார்கள். பெற்றோர்களும் அவர்களின் முழு குடும்பமும் ஷியா கொள்கையை கொண்டவராக உள்ளனர். 1949 ஆம் ஆண்டில் தனது குடும்பத்துடன் அன்னார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டபோது உமது கணவர் காஃபிர் ஆகி விட்டார். எனவே திரும்பி வந்து விடு என்று அவரது பெற்றோர்கள் கூறினர். அன்னார் குடும்பத்துடன் அல்ல. மாறாக, தனது கணவருடன் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். ஏனைய குடும்பத்தினர் பைஅத் செய்யவில்லை. எவ்வாறிருப்பினும் கணவர் காஃபிராகி விட்டார். எனவே நீங்கள் அவரை விட்டு விடுங்கள் என்று பெற்றோர்கள் கூறினர். அப்போது நான் தற்போது தான் சரியான முஸ்லிமாக ஆகி உள்ளேன் என்று தனது முழு குடும்பத்தினருக்கும் அன்னார் பதிலளித்தார்கள். மேலும் உங்களுடன் இருந்தபோது நான் வெறும் ஃபஜ்ர் தொழுகையை மட்டுமே தொழுது வந்தேன். தற்போது நான் ஐவேளை தொழுகைகளை மட்டும் தொழவில்லை. மாறாக, தஹஜ்ஜுத் தொழுகையையும் தொடர்ந்து தொழுது வருகின்றேன். எனவே திரும்பி வர மாட்டேன் என்று மர்ஹூமா கூறி விட்டார்.

14 ஆண்டுகளுக்குப் பிறகு தமது பெற்றோரை சந்திப்பதற்காக மர்ஹூமா சென்றபோது மிகவும் நல்ல முறையில் பெற்றோர்களை சந்தித்தார்கள். அதற்குப் பிறகும் கூட அவர்களின் உள்ளம் மென்மையடையவில்லை. பின்னர் ஒருபோதும் அவர்கள் மர்ஹூமாவை சந்திக்க வரவில்லை.

ஜமாஅத்தின் மீது உண்மையான அன்பு கொண்டிருந்தார்கள். கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்புமிக்க தொடர்பு வைத்திருந்தார்கள். ஏழைகளை பராமரிப்பவராகவும், நல்ல தூய பெண்மணியாகவும் இருந்தார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். தமக்குப் பிறகு மூன்று மகன்களையும், நான்கு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் மூத்த மகன் டாக்டர் அப்துர் ரஹீம் சாஹிப் அவர்கள் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டு சிரோலியோனில் தொண்டாற்றும் நற்பேறு பெற்றுள்ளார்கள். இளைய மகன் அப்துல் காலிக் சாஹிப் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார்கள். இன்றைய நாட்களில் கேமரூனில் தொண்டாற்றும் நற்பேறு பெற்று வருகின்றார்கள். அங்கு மிஷனரி இன்சார்ஜ் ஆக உள்ளார்கள். அமீராகவும் உள்ளார்கள். செயல் களத்தில் தற்போது மும்முரமாக உள்ளார்கள். அதன் காரணமாக தாயாரின் ஜனாஸாவில் பங்கு பெற முடியவில்லை.

அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. மர்ஹூமாவின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

(மவ்லவி அ. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

## *மல்ஃபூஸாத் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கிளர்ச்சியாளர்களுக்கும் தண்டனை வழங்கினார்கள். மேலும் அமைதியை நிலைநாட்டினார்கள். மேலும் நான் உண்மையான கலீஃபாவின் மூலம் அமைதியை நிலைநாட்டுவேன் என்று இறைவன் வாக்குறுதி செய்து கூறியிருந்தது போன்று அன்னார் அமைதியை நிலைநாட்டினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் இந்த முன்னறிவிப்பு முழுமையடைந்தது. வானமும், பூமியும் செயல் ரீதியாக சாட்சியம் வழங்கி விட்டன. ஆக இது சித்தீக்கின் விளக்கம் ஆகும். அவரிடத்தில் உண்மையின் தரம் இந்த அந்தஸ்திலும், சிறப்பிலும் இருக்க வேண்டும். சீர்தூக்கிப் பார்ப்பதால் விவகாரங்கள் மிக விரைவாக தீர்ந்து விடுகின்றன.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 344 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


### *நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

**தொலைபேசி எண்: *1800 103 2131***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)


## *முதல் பக்கத்தின் தொடர்ச்சி... ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்று...*

எவருடைய உரிமையிலும் எந்த குறையும் செய்திருக்காத மற்றும் ஒருவருடைய உரிமையை பறித்து மற்றவருக்கு வழங்காத சட்டத்தையும் இறைவனால் மட்டுமே உருவாக்க முடியும்.

அந்த இறைவன் படைப்பினத்தின் உதவிக்கு தேவையுடையவன் அல்லன். அனைவருமே அவனது அடியார்கள் ஆவர். இது இவ்வளவு மகத்தான உண்மையாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் சட்டங்களை உருவாக்கி வருகின்றான். ஆனால் எவ்வாறு அதில் ஒருவருடைய உரிமை பறிக்கப்படுகின்றது. மற்றொருவருக்கு அதிகமான உரிமை வழங்கப்படுகின்றது.

இன்றைய நாட்களில் அரசியல் கருத்து வேறுபாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஓர் அரசாங்கம் தொழிலாளிகளின் உரிமையை பறிக்கின்றதாக இருக்கின்றது. வேறொரு அரசாங்கம் ஒரு பிரிவினருக்கே அனைத்து உரிமைகளையும் கொடுத்து விட்டு மற்றவர்களை மனித உரிமைகளிலிருந்தே இழப்பிற்குரியவர்களாக ஆக்குகின்றது. அதேபோன்று உணர்ச்சிகளின் அடிமையாக இருக்கின்ற மனிதன் சட்டங்களை உருவாக்குகின்றான். அந்நிலையில் அவன் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்தி விடுகின்றான். முழு உலகின் உணர்வுகளையும் கருத்தில் கொள்வதும் இல்லை. கருத்தில் கொள்ளவும் முடியாது.

துறவறத்தின் பக்கம் ஆர்வம் கொள்ளக் கூடியவர் உலகத்தை துறப்பதன் பெயரையே நன்மை என கூறுகின்றார். மற்றொரு பக்கம் உலக பேராசைகளை கொண்டவர் உலக முன்னேற்றங்களுக்கே நன்மை என பெயர் சூட்டுகின்றார். இந்நிலையில் மனிதனை படைக்கக் கூடிய மற்றும் எல்லா மனிதர்களின் உணர்ச்சிகளையும் அறிந்த அந்த இறைவன் புறமிருந்து கிடைக்கும் போதனை தான் இந்த குறைகளிலிருந்து தூய்மையானதாக இருக்க முடியும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 14பக்கம் 133 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## *நியூஸிலாந்து சுற்றுப் பயணம் (கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...*

பாரதிய சமாஜின் தலைவரும், பல்வேறு அரசாங்க துறைகளின் உறுப்பினர்களும், மனித உரிமை கழகங்களின் பிரதிநிதிகளும், மாவுரி கோத்திரத்தின் உறுப்பினர்களும், பேராசிரியர்களும், மருத்துவர்களும், வக்கீல்களும், உலகின் பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய மக்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருந்தனர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வருகைக்கு முன்பாக அனைத்து விருந்தினர்களும் தத்தமது இருக்கையில் அமர்ந்து விட்டனர். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக 11:00 மணியளவில் வருகை தந்தார்கள். அப்போது அனைத்து விருந்தினர்களும் எழுந்து நின்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்றார்கள்.

நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பதானது. மதிப்பிற்குரிய இஜாஸ் அஹ்மது கான் அவர்கள் திலாவத் ஓதினார்கள். அதன் பிறகு அதன் Maori மொழியாக்கத்தையும், ஆங்கில மொழியாக்கத்தையும் அஹ்மதி இளைஞரான அபூபக்ர் மற்றும் Mathew Howell ஆகியோர் படித்தனர். அதன் பிறகு மதிப்பிற்குரிய ஷகீல் அஹ்மது முனீர் சாஹிப் Maori மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கத்தின் அறிமுகத்தை எடுத்துரைத்தார்கள். அன்னாருக்கு Maori மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. அன்னார் 1988 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் ஜமாஅத்தின் அமீராக தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னார் Maori மொழியை கற்க தொடங்கி இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் உயர்தரமான வகையில் மொழியை கற்றார்கள். அதன் விளைவால் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்வதற்கும் நற்பேறு கிடைத்தது. இதன் முழுமையான மொழியாக்கம் இந்த வருடம் வெளியாகி உள்ளது.

(ஆதாரம்: அல் பத்ர் பத்திரிகை உருது, 20 பிப்ரவரி 2021)


அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 16 Dec 2021 Issue No. 50

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் (2013)

**01 நவம்பர் 2013 (வெள்ளிக்கிழமை)**

**லஜ்னா இமாயில்லாஹ் நியூஸிலாந்தின் தேசிய செயற்குழு உறுப்பினர்களுடன் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சந்திப்பு**

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

லஜ்னா வெளியீட்டுச் செயலர் அவர்கள் லஜ்னா இமாயில்லாஹ் நியூஸிலாந்தின் சார்பாக வெளியாகும் அன்–நுஸ்ரத் என்ற பத்திரிகையின் புதிய இதழையும், ரோமானிய Script–ல் லஜ்னா இமாயில்லாஹ் சார்பாக வெளியிடப்பட்ட ஜமாஅத் கவிதைகளின் புத்தகத்தின் இரண்டு புத்தகங்களையும் ஹுஸூர் அவர்களுக்கு வழங்கினார்கள். அதில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது கையொப்பம் இட்டார்கள்.

இளம் லஜ்னா அமைப்பு என்ற எந்த சொற்றொடரும் இல்லை. நீங்கள் 15, 25 வயதினருக்கு மத்தியில் லஜ்னா அமைப்பின் உறுப்பினர்களின் குழுவிற்கு குரூப்-A என்ற பெயரை வழங்கிக் கொள்ளலாம் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

நாஸிராத் செயலர் தனது அறிக்கையை சமர்ப்பித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: 42 உறுப்பினர்களில் 22 நாஸிராத் சிறுமிகள் ஆக்லாண்டில் வசிக்கின்றார்கள். தொடர்ந்து நாஸிராத் சிறுமிகளுக்கான வகுப்பு நடைபெறுகின்றது. அதில் தேசிய கல்வித்துறையின் சார்பாக தயார் செய்யப்பட்ட Modules துணை கொண்டு கற்பிக்கப்படுகின்றது. இந்த Modules–ல் தொழுகை மற்றும் திருக்குர்ஆனின் மீது அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. நாஸிராத் சிறுமியர்கள் தொழுகை மற்றும் அன்றாட துஆக்களை கற்றுக் கொள்கின்றனர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு வழிகாட்டினார்கள். நீங்கள் உங்களது நிகழ்ச்சிகளிலும், உங்களது கலந்துரையாடலிலும் இந்த தலைப்பையும் வைத்துக் கொள்ளுங்கள். அதாவது நாம் ஏன் அஹ்மதியாக இருக்கின்றோம்? நமது நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? ஓர் அஹ்மதி பெண்ணின் நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும்? போன்ற இந்த தலைப்புகளை சேர்த்துக் கொள்ளுங்கள். அதேபோன்று நாஸிராத் சிறுமிகளுக்கு கிறிஸ்தவம் மற்றும் கத்மே நுபுவ்வத் விவகாரங்கள் தொடர்பாகவும் கூறுங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

செகரட்டரி மால் அவர்களிடம் லஜ்னா அமைப்பின் வருடாந்திர பட்ஜெட் என்ன? என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கேட்டார்கள். அப்போது வருடாந்திர பட்ஜெட் 7200 டாலர் என்றும், சம்பாதிக்கக் கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 63 என்றும் செகரட்டரி மால் அவர்கள் கூறினார்கள். அவர்களில் சிலர் முழு நேர ஊழியர்களாகவும், சிலர் பகுதி நேர ஊழியராகவும் உள்ளனர் என்றும் கூறினார்கள்.

வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீத் செயலர்கள் தங்களது அறிக்கையை சமர்ப்பித்தவாறு உறுப்பினர்கள் தங்களது சந்தாக்களை அதிகரித்துள்ளனர் என்று கூறியபோது லஜ்னா உறுப்பினர்களுக்கு மத்தியில் போட்டிக்கான ஆன்மாவை ஊக்கப்படுத்துங்கள். இதன் மூலம் அவர்களின் சந்தாக்களிலும் கூடுதல் ஏற்படும் என்று ஹுஸூர் கூறினார்கள். அதேபோன்று நாஸிராத் சிறுமிகளையும் சந்தாக்களில் இணைத்துக் கொள்ளுங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டினார்கள்.

புதிய அஹ்மதிகளுக்கான செயலர் தனது அறிக்கையை சமர்ப்பித்தவாறு 7 புதிய அஹ்மதி பெண்களுடன் தொடர்பு உள்ளது. அவர்களுக்கு ஜமாஅத் கூட்டங்களிலும், ஏனைய நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறும்படி கூறப்படுகின்றது என்று கூறினார். அப்போது அவர்களுடன் நிரந்தரமான தொடர்பு இருக்க வேண்டும். மேலும் அவர்களை முறையாக தமது அமைப்பின் அங்கமாக ஆக்க வேண்டும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டினார்கள்.

நீங்கள் அடுத்த வருடம் குறைந்தது நான்கு பைஅத்துகள் வாங்க வேண்டும். அதற்காக முயற்சி செய்யுங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நியூஸிலாந்து லஜ்னா உறுப்பினர்களுக்கு கூறினார்கள்.

லஜ்னா கல்விச் செயலர் தமது அறிக்கையை சமர்ப்பித்தவாறு இவ்வாறு கூறினார்: 2012–13 ஆம் ஆண்டிற்கான கல்விப் பாடத்திட்டம் மூன்று பகுதிகளில் பங்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியையும் நான்கு மாதங்களில் முழுமை செய்யப்படுகின்றது.

அப்போது கிறிஸ்தவம் மற்றும் அஹ்மதிய்யத்தின் கொள்கைகள் குறித்தும் உரையாடல் நடைபெற வேண்டும் என்றும், லஜ்னா அமைப்பின் உறுப்பினர்களுக்கு இந்த தலைப்புகள் பற்றிய கேள்விகளுக்கு பதில் வழங்கப்பட வேண்டும் என்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டினார்கள்.

அனைத்து லஜ்னா அமைப்பின் உறுப்பினர்களும் குறைந்தபட்சம் தமது பாடத்திட்டத்தை கண்டிப்பாக படிக்க வேண்டும் என்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டினார்கள்.

லஜ்னா இமாயில்லாஹ்வின் செயற்குழு கூட்டம் 8:30 மணி வரை நடைபெற்றது. அதன் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஸ்ஜித் பைத்துல் முகீத்திற்கு சென்று மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜம்மு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது இருப்பிடத்திற்கு சென்று விட்டார்கள்.

**2 நவம்பர் 2013 (சனிக்கிழமை)**

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 5:15 மணியளவில் மஸ்ஜித் பைத்துல் முகீதிற்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது இருப்பிடத்திற்கு சென்று விட்டார்கள். காலையில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது அலுவலக கடிதங்களையும், அறிக்கைகளையும், உலகின் பல்வேறு நாடுகளின் ஜமாஅத்துகளிலிருந்து வந்திருந்த Fax களையும் பார்வையிட்டார்கள். மேலும் உரிய வழிகாட்டல்களை நல்கினார்கள்.

**மஸ்ஜித் பைத்துல் முகீத் திறப்பு விழா அடிப்படையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி**

இன்று மஸ்ஜித் பைத்துல் முகீத் திறப்பு விழா தொடர்பாக பள்ளிவாசல் வளாகத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் 107 விருந்தினர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அந்த விருந்தினர்களில் சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன:

Hon. Judith Collins (Ethnic Affairs – அமைச்சர்)
Hon. Louise Wall (பாராளுமன்ற உறுப்பினர்)
Hon. Kulwant Sing Bakshi (பாராளுமன்ற உறுப்பினர்)
Mr. Dame Susan Devoy (பாராளுமன்ற உறுப்பினர்)
Mr. David Rutherford (மனித உரிமை கமிஷன் தலைவர்)
Mr. Ataur Rahman (பங்களாதேஷ் தூதரக கமிஷனர்)
Dr. Hon. Richard Worth (ஆக்லாந்து இன்டர்ஃபெயித் சேர்மன்)
Mr. Monaco Ruth Cleaver (ஆக்லாந்து இன்டர்ஃபெயித் சேர்மன்)
Mr. Rohan Jaduram (Race & Relation Advisor)
Mr. Jordan Samuela (Nz First in place Asenati Advisor)
Mr. Rev Nick Frater (பாராளுமன்ற உறுப்பினர்)
Mr. Baptist (Minister Reve Bruce Keeley All Saints Church)
Venkat Raman (Indian Jeet Sauchdev)

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad